# முகவுரை.

சென்னை யூனிவர்ஸிடியாரால் 1908-ம் வருஷத்து, பி. ஏ. பட்டப் பரீக்ஷைக்குப் பாடமாக நியமிக்கப்பட்ட குறிஞ்சிப்பாட்டையும், ஆசிரியர் நச்சினார்க்கினியருரையையும், நூதனமாக எழுதிய விசேடக்குறிப்புக்களையும் இப்போது பதிப்பிக்கலானேன்.

குறிஞ்சிப்பாட்டென்பது, நக்கீரனார்முதலிய கடைச்சங்கப்புலவர்களால் இயற்றப்பட்டு அவர்களால் தொகுக்கப்பெற்ற பத்துப்பாட்டினுள், எட்டாவதாக உள்ள ஓரகவற்பா; இஃது உசுக - அடிகளையுடையது. இந்நூலாசிரியர், கபிலரென்பார்.

பத்துப்பாட்டாவன: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பனவாம். இவற்றுள் திருமுருகாற்றுப்படை, சைவத்திருமுறைகளில் கக - ம் திருமுறைப்பிரபந்தவரிசையிற் சேர்க்கப்பெற்றுள்ளது; மலைபடுகடாம், கூத்தராற்றுப்படையெனவும் வழங்கும்; நிற்க.

குறிஞ்சிப்பாட்டு, பெருங்குறிஞ்சியெனவும் வழங்கும்; ஆரிய அரசன்பிரகத்தனுக்குத் தமிழ்ச்சுவையை அறிவுறுத்தற்பொருட்டு இது பாடப்பட்டதென்பர்; இவ்வரலாற்றால் இந்நூலின் மேம்பாடு கூறாமலே விளங்கும்.

தலைவனைப்பிரிந்துவருந்திய தலைவியினது பலவகையான வேறுபாடுகளைக்கண்டு துன்புற்ற செவிலித்தாய்க்குப் பாங்கி அறத்தொடுநின்றதாக இந்நூல் இயற்றப்பெற்றது.

மலையின் இயல்பைக்கூறுதலில் மிக்க ஆற்றலுடையவரென்று புகழ்பெற்ற கபிலரால் இயற்றப்பட்டமையின், இதில் ஏனைநூல்களிற் காணப்படாத மலைவளங்கள் மிக அறியலாகும்.

உரையின் இறுதியிலுள்ள வினைமுடிபால், இப்பாட்டின்பொருட்சுருக்கம் விளங்கும்.

விளங்க எழுதவேண்டியவற்றைச் சிலகாரணங்களால் நான் எழுதக்கூடவில்லை; அக்குற்றத்தை விவேகிகள் பொறுத்திடுவார்களென்று நம்புகிறேன்.

சென்னை,
13—7—08.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

## இந்நூலாசிரியராகிய

# கபிலர் வரலாறு.

இவர்பிறந்தவூர், பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூர்; இது, திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் ௨௭ - வதாகிய ஞானோபதேசஞ்செய்த திருவிளையாடலிலுள்ள, "நீதிமா மதூக நீழ*னெட்டிலை யிருப்பை யென்றோர், காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனார் பிறந்தமூதூர், சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துலங்கக் காட்டும், வேதநா யகனார் வாழும் வியன்றிரு வாத வூரால்" என்னும் ௩ - ம் திருவிருத்தத்தால் வெளியாகின்றது.

இவர் அந்தணவருணத்தினர்; புறநானூறு, ௨௦௦.—"யானே, பரிசிலன் மன்னு மந்தணன்", ௨௦௧.—"யானே, தந்தை தோழ னிவரென் மகளிர், அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே" எனத் தம்மைப்புலப்படுத்தற்காக இவர்கூறியசெய்யுட்களும், ௧௨௬.—"புலனழுக் கற்ற வந்த ணாளன்" என மாறோகத்து நப்பசலையார் இவரைப் பாராட்டிக்கூறியசெய்யுளும் இதனைப்புலப்படுத்தும்.

வேள்பாரியினுடைய உயிர்நண்பரும் அவனுடைய அவைக்களத்துப்புலவருமாக இவர்விளங்கினார்; தமிழ்நாட்டுமூவேந்தரும் அழுக்காறுற்று அவனைக் கொல்லநினைந்து நால்வகைச்சேனைகளோடும் அவன்மலையைச்சூழ்ந்தகாலையில் அவர்களைச் சிறிதும் மதியாது அவனுடைய அருமைக்குணங்களைப் புலப்படுத்திப் பாடினர், அவ்வருமைச்செய்யுட்கள் புறநானூற்றிற் காணப்படும்; அவனிறந்த பின்பு, இவர், பிரிவாற்றாது மனமுருகிப் பலசெய்யுட்களாற்புலம்பி, அவன் புதல்வியரை அழைத்துச்சென்று மணஞ்செய்துகொள்ளும்படி இருங்கோவேள், விச்சிக்கோனென்பவர்களைவேண்டி மறுத்தமைகண்டு அவர்களைவெறுத்துப் பின்பு அம்மகளிரைப் பார்ப்பார்ப்படுத்துத் தம்முடைய நட்புக்கடனைக்கழித்தனர்.

செல்வக் கடுங்கோவாழியாதனென்னும் சேரவரசன்மீது பதிற்றுப்பத்திலுள்ள ௭ - ம் பத்தைப்பாடி நூறாயிரம்பொற்காசும் அவன்

* "நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ, வாடா தாயிற் பீடுடைப் பிடியின், கோடேய்க் கும்மே வாடிலோ பைந்தலைப், பரதர் மனைதொறு முணங்குஞ், செந்தலை யிறவின் சீறேய்க் கும்மே".—இச்செய்யுள் தமிழ்நாவலர்சரிதையிற்கண்டது.

ஒருமலைமீதேறிக் கண்டுகொடுத்தநாடும் பரிசிலாகப்பெற்றவர் இவர்; இஃது, அந்நூலில் ௭ - ம் பத்தின் பதிகத்தாலும், அந்நூல் அ௫ - ம் பாடலிலுள்ள, "கபிலன் பெற்ற வூரினும் பலவே" என்பதனாலும் விளங்குகின்றது.

இவருடையசெய்யுட்கள் மிக்க இனிமையையுடையன; பழைய வுரைகளில் உதாரணமாகக்காட்டப்படும், 'கபிலரதுபாட்டு' என்னும் தொடர்மொழியே இதனை வலியுறுத்தும்.

இவரருளிச்செய்தனவாக உ௪௬ - பாடல்கள் இப்பொழுது கிடைக்கின்றன. அவற்றுள், அகவற்பாக்கள் உ0௭: [நற். உ0; குறு. உ௬; ஐங். ௧00; பதிற். ௧0; அகநா. ௧௬; புறநா. ௩0; குறிஞ். ௧; "நெட்டிலைபிருப்பை" என்பது-௧.] வெண்பா ௪உ: [திருவள் ளுவமாலையிலுள்ள, "தினையளவு" என்பது ௧; இன்னாநாற்பதி லுள்ள பாடல் ௪௧.]

இவரியற்றியபாடல்களை உற்றுநோக்குகையில், இவர் குறிஞ் சித்திணையில் மிகப்பயின்றவரென்றும் அதன்வளங்களை விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவரென்றும் அவை விளக்குகின்றன.

மேற்கூறிய அகவற்பாக்கள் உ0௭ - ல் குறிஞ்சித்திணையைச்சார் ந்தவை ௧௫௫.

இவருடையவாக்கில் விநாயகக்கடவுள், முருகக்கடவுள், சிவ பெருமான், பலதேவர், திருமால் இவர்களுடையதுதிகள் வந்திருக் கின்றன. இதனால், இவர், சமயக்கோட்பாட்டிற் பாரதம்பாடியபெருந் தேவனாரைப் போன்றவராக எண்ணப்படுகிறார்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என் னும் முத்தொகுதி நூல்களிலும் இவருடையபாடல்களும் நூல்களும் கலந்திருத்தல் இவரது பெருமையை விளக்குகின்றது.

பதிற்றுப்பத்து, அ௫ - "அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய, மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவி, னுவலை கூராக் கவலையி னெஞ்சி, னனவிற் பாடிய நல்லிசைக், கபிலன்" எனப் பெருங்குன்றூர் கிழாரும், புறநானூறு, ௫௩ - "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" எனப் பொருந்திலிளங்கீரனாரும், ௧௨௬ - "புலனழுக் கற்ற வந்த ணாள, னிரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப், பரந்திசை நிற்கப் பாடினன்", ௧௭௪ - "பொய்யா நாவிற் கபிலன்" என மாறோ கத்து நப்பசலையாரும் பாடியவற்றைப்பார்க்கையில் இவருடைய

மனம்வாக்குக்காயங்களின் தூய்மையும் அறம்புரிகொள்கையும் பெரும்புலமையும் அன்புடைமையும் நட்பின்பெருமையும் நன்குவிளங்குகின்றன.

இவராற்பாடப்பட்டோர்:— அம்மை, இருங்கோவேள், சேரமான்செல்வக்கடுங்கோவாழியாதன், நள்ளி, மலையமான் திருமுடிக்காரி, விச்சிக்கோன், வேள்பாரி, வையாவிக்கோப்பெரும்பேகன், மலையனென்பவர்கள்.

கொல்லிமலை, பறம்புநாடு, பறம்புமலை, முள்ளூர்மலை, முள்ளூர்க்கானமென்பவைகள் இவராற் பாராட்டப் பெற்றிருத்தலின், அவைகள் இவர்காலத்தில் விளக்கமுற்றிருந்தனவென்றும் இவர் பழகிய இடங்களென்றும் தெரிகின்றன.

நட்பு, வண்மை, நன்றிமறவாமை முதலியவை இவருடைய செய்யுட்களிற் பரக்கக் காணலாகும்.

பழைய இலக்கணவுரைகளில், 'கபிலபரணர்' என்றுவழங்குகிற தொகைநிலைத்தொடரால், பரணரென்பவருக்கும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில்வந்துள்ள, "பின்னமில் கபிலன் றோழன் பெயரிடைக் காட னென்போன்" (உ0. க) என்னும் திருவிருத்தத்தால் இடைக்காடருக்கும் சிறந்தநட்பினராக இவர் எண்ணப்படுகிறார். இவர்வேறு; தொகை நூல்களிற் காணப்படும் தோல்கபிலரென்பவர் வேறு.

கக - ம் திருமுறையில் வந்துள்ள மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதியென்னும் பிரபந்தங்கள் மூன்றையும் அருளிச்செய்த கபிலதேவநாயனாரென்பவர் இவரேயென்று பெரியோர் கூறுவர்.

மேற்கூறிய திருவிளையாடற்புராணத்தில், இடைக்காடன் பிணக்குத்தீர்த்த திருவிளையாடல், கக - ம் திருவிருத்தத்தில், "ஏனையந் தாதி சொன்னவன் கபிலன்" எனச்சிவபெருமான் கட்டளையிட்டருளியதாக வந்திருத்தல் காண்க.

## இந்நூல் உரையாசிரியராகிய

# நச்சினார்க்கினியர் வரலாறு.

### விருத்தம்.

*எவனாலவாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்*
*எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்*
*எவன்பரம வுபகாரி யெனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்*
*அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.*

இந்நூலின் உரையாசிரியராகிய ஆசிரியர் நச்சினார்க்கினியர், பாண்டிவளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவர். தமிழ்ப்பாஷையிலுள்ள பலவகையான எல்லாநூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னராதல், "வண்டிமிர் சோலை மதுரா புரிதனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பாரத் துவாச, னான்மறை துணிந்த நற்பொரு ளாகிய, தூய ஞான நிறைந்த சிவச் சுடர், தானே யாகிய தன்மை யாளன்" என்னும் உரைச்சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். சிவஸ்தலங்களுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்', 'பெரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் ஏழெழுத்தொருமொழிக்கும் உதாரணமாக, இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழிமரபில், "ஓரெழுத்தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்தநூல்களாகிய திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்பவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கிய விலக்கணப் பொருள்களுக்கன்றித் தத்துவப்பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருத்தலாலும், அங்ஙனம் மேற்கோள்கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரைகளாலும், நாமகளிலம்பகத்து "மேகம்மீன்ற" என்னும் ௩௩௩-ம் செய்யுளில், 'போகம்மீன்ற புண்ணியன்' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படையுரையிற் காட்டிய சில நயங்களாலும், உரைச்சிறப்புப்பாயிரத்தில், "தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன்" எனக்கூறப்பெற்றதனாலும், மற்றுஞ் சிலவற்றாலும் இவர் சைவசமயியாதல் நன்கு வெளியாகும்.

இவ்வுரையாசிரியர், பத்துப்பாட்டினுள் இந்நூலுக்கன்றி மற்ற நூல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும் சீவகசிந்தாமணிக்கும் குறுந்தொகையிற் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் உரைசெய்தருளினர். இன்னும் சில நூல்களுக்கு இவர் உரையியற்றினரென்பர்; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேராசிரியராற் செய்யப்பட்டதென்று தெரிகின்றமையாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ்சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப்பதாக இவருடைய உரைச்சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும் அவைகள் இங்கே எழுதப்படவில.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரையெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை ஓருரையை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீகரித்துக் கொண்டார்களென்று சைனர் கூறுகின்றனர்.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள் இதுகாறும் விளங்கியவை அ0; அவை வருமாறு:—

க. அகத்தியம்.
உ. அகநானூறு.
ங. அணியியல்.
ச. அவிநயம்.
ரு. ஆசாரக்கோவை.
சு. இராமாயணவெண்பா.
எ. இறையனாரகப்பொருள்.
அ. ஏலாதி.
கூ. ஐங்குறுநூறு.
க0. ஐந்திணையெழுபது.
கக. ஐந்திணையைம்பது
கஉ. ஔவையார்பாடல்.
கங. கடகண்டு.
கச. கலித்தொகை.
கரு. களவழிநாற்பது.
கசு. காக்கைபாடினியம்.
கஎ. கார்நாற்பது
கஅ. காரைக்காற்பேயார்பாடல்.
ககூ. குணநாற்பது.
உ0. குறிஞ்சிப்பாட்டு.
உக. குறுந்தொகை.
உஉ. கூத்தநூல்.
உங. கைந்நிலை.
உச. கொன்றைவேந்தன்.
உரு. சிலப்பதிகாரம்.
உசு. சிறுகாக்கைபாடினியம்.
உஎ. சிறுகுரீஇயுரை.
உஅ. சிறுபஞ்சமூலம்.
உகூ. சிறுபாணாற்றுப்படை.
ங0. சினேந்திரமாலை.
ஙக. சீவகசிந்தாமணி.
ஙஉ. தகடூர்யாத்திரை.
ஙங. தந்திரவாக்கியம்.
ஙச. திணைமாலைநூற்றைம்பது.
ஙரு. திணைமொழியைம்பது.
ஙசு. திரிகடுகம்.
ஙஎ. திருக்குறள்.
ஙஅ. திருக்கோவையார்.

௩௯. திருப்பாட்டு.
௪0. திருமுருகாற்றுப்படை.
௪௧. திருவாசகம்.
௪௨. திருவாய்மொழி.
௪௩. திருவுலாப்புறம்.
௪௪. தொல்காப்பியம்.
௪௫. நற்றிணைநானூறு.
௪௬. நாடகநூல்.
௪௭. நாலடியார்.
௪௮. நெடுநல்வாடை.
௪௯. பட்டினப்பாலை.
௫0. பதிற்றுப்பத்து.
௫௧. பரிபாடல்.
௫௨. பல்காப்பியம்.
௫௩. பல்காயம்.
௫௪. பழமொழி.
௫௫. பன்னிருபடலம்.
௫௬. பாரதவெண்பா.
௫௭. புறநானூறு
௫௮. புறப்பொருள்வெண்பாமாலை.
௫௯. பூதத்தாரவையடக்கு.
௬0. பூதபுராணம்.
௬௧. பெருங்கதை.
௬௨. பெரும்பாணாற்றுப்படை.
௬௩. பெரும்பொருள்விளக்கம்.
௬௪. பொய்கையார்முதலாயினோர்செய்த அந்தாதி.
௬௫. பொருநராற்றுப்படை.
௬௬. மணிமேகலை.
௬௭. மதுரைக்காஞ்சி.
௬௮. மலைபடுகடாம்.
௬௯. மாபுராணம்.
௭0. முத்தொள்ளாயிரம்.
௭௧. முதுமொழிக்காஞ்சி.
௭௨. முல்லைப்பாட்டு.
௭௩. மூதுரை.
௭௪. மோதிரப்பாட்டு.
௭௫. யாப்பருங்கலம்.
௭௬. யாழ்நூல்.
௭௭. வசைக்கடம்.
௭௮. வசைக்கூத்து
௭௯. வளையாபதி.
௮0. விளக்கத்தார்கூத்து.

தொல்காப்பியவுரை முதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும் பல உரைகளிலிருந்தும் பற்பல அரிய விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்றமையாலும் பிறவாற்றாலும் இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச்சொல்லுவதுடன் பலவகையான கலைகளிலும் பயிற்சியுடையவரென்று சொல்லுதற்கும் இடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளையாசிரியர்முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்தினாற்பிற்பட்டவரென்று தெரிகின்றது.

“பாரத்தொல்காப்பியமும்”, “தொல்காப்பியத்தில்”, “பாற்கடல்போல”, “பச்சைமாலனைய” என்னுமுதற்குறிப்பையுடைய பாடல்கள், பண்டைக்காலத்தாரால் இயற்றப்பெற்று இவருடைய உரைச்சிறப்புப்பாயிரங்களாக வழங்குகின்றன.

அமிழ்தினுமினிய தமிழ்மடவரல் செய் அருந்தவத்தின் பெரும் பயனாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

# குறிஞ்சிப்பாட்டு.

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு
முட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
யிருவே மாய்ந்த மன்ற மிதுவென
நாமறி வுறாலிற் பழியு முண்டோ
வாற்றின் *வாரா ராயினு மாற்ற
வேனை யுலகத்து மியைவதா னமக்கென
மானமர் நோக்கங் கலங்கிக் கையற்
றானாச் சிறுமைய ளிவளுந் தேம்பு
மிகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
விருபே ரச்சமோ டியானு மாற்றலேன்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர லுடைமையும்

* வாராதாயினுமென்றும் பாடம்.

வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணாது
தெமியேந் துணிந்த வேமஞ்சா லருவினை
நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குர
னற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
யெற்பட வருதிய ரெனநீ விடுத்தலிற்
கலிகெழு மீமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி
யுரவுக் கதிர்தெறூஉ முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ
யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
வண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீ
ரவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
யுள்ளகஞ் சிவந்த கண்ணேம் வள்ளித
ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
யுரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிள

மெரிபுரை யெறுழுஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடசம்
மெருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகங்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்த
றாழை தளவ முட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்க
மீங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை
* யடும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரந்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவ நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
யாரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவு
மரக்குவிரித் தன்ன † பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்
புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்

* அடம் பெனவும் பாடம். † பாரம் புழகெனவும் பாடம்.

வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்
கிள்ளை யோப்பியுங் கிளையிதழ் பறியா
................ கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
யெரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக
வெண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
யீரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
யணிமிகு வரிமிஞி றார்ப்பத் தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பித்திகத் தாயித ழலரி
யந்தொடை யொருகாழ் வளைஇச் செந்தீ
யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவி லேந்தி யம்புதெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
யியலணிப் பொலிந்த வீகை வான்கழ
றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வே லிளைஞரி
னுரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளு
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
கிளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா
மிடும்பைகூர் மனத்தே மருண்டுபுலம் படா

4034



# குறிஞ்சிப்பாட்டு.

மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெம்
மலமர லாயிடை வெரூஉத லஞ்சி
மெல்லிய வினிய மேவரக் கிளந்தெம்
மைம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி
யசைமென் சாய லவ்வாங் குந்தி
மடமதர் மழைக்க ணிளையீ ரிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதலி னல்லாந்து கலங்கிக்
கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீரென
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பி னிம்மென விமிரு
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவி ழலரித் தாசினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குர லவித்தெஞ்
சொல்லற் பாணி நின்றன னாக
விருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையேர் நோக்கின் மனையோள் மடுப்பத்
தேம்பிழி தேறன் மாந்தி மகிழ்சிறந்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்
திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனா
தரவுற ழஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா லுடல்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை * தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்

---

* தெளிர்ப்பவெனவும் பாடம்.

சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ
லுடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவே
ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திண்ணிலைக் கடம்பின் றிரளரை வளைஇய
துணையறை மாலையிற் கைபிணி விடேஎ
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
யருங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசையல் யாவது
மஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கன னந்நிலை
நாணு முட்கு நண்ணுவழி யடைதர
வொய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
யாக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவின்
னெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேற
னீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி
யரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிற்றூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிற
லுள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயிற் பலருணப்

பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னொ டுண்டலும் புரைவ தென்றாங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
யந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி
வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
யெல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
வேங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவல
ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற
வாம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
யந்தி யந்தண ரயரக் கானவர்
விண்டோய் பணவைமிசை ஞெகிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானங்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் கானூஉ
நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
வீர நன்மொழி தீரக் கூறித்
துணைபுணை ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயி
லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று

மிரவரன் மாலைய னேவரு தோறுங்
காவலர் கடுகினுங் கதனாய் குரைப்பினு
நீதுயி லெழினு நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும்
பெறாஅன் பெயரினு முனிய லுறாஅ
திளமையி னிகந்தன்று மிலனே வளமையிற்
றன்னிலை *தீர்ந்தன்று மிலனே கொன்னூர்
மாய வரவி னியல்புநினைஇத் தேற்றி
நீரெறி மலரிற் சாஅ யிதழ்சோரா
ஈரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்க
ணாகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுக் கலுழுமா லிவளே கங்கு
லளைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்
துருமுஞ் சூரு மிரைதே ரரவமு
மொடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமு
நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலை விடரக முடையவா லெனவே.

## இதன்பொருள்.

இதற்குக் குறிஞ்சியென்று பெயர்கூறினார்; இயற்கைப்புணர்ச்சியும் பின்னர்நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறுதலின். அன்றியும் முதலானும் கருவானும் குறிஞ்சிக்குரியனவேகூறுதலானும் அப்பெயர் கூறினார். †"அறத்தொடு நிற்குங் காலத் தன்றி, யறத்தியன் மரபில டோழி யென்ப." என்பதனால், தோழி அறத்தொடு நிற்குங்காலம்வந்து செவிலிக்கு அறத்தொடுநின்றவழி அதற்கிலக்கணங்கூறிய †"எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல், கூறுத லுசாத லேதீடு தலைப்பா, டுண்மை செப்புங் கிளவி யொடு தொகைஇ, யவ்வேழு வகைய வென்மனார் புலவர்." என்னுஞ் சூத்திரத்தேழனுள், கூறுதலுசாதலொழிந்த ஆறுங்கூறி அறத்தொடுநிற்கின்றாளென்றுணர்க.

---

* திரிந்தன்றுமிலனென்றும் பாடம்.

† தொல் - பொருளியல், கஉ, கங.

(குறிப்பு). இதற்கு - இப்பாட்டிற்கு. இயற்கைப்புணர்ச்சி - தெய்வத்தானுளதாவது ; இயற்கை, தெய்வம், ஊழ் என்பன ஒருபொருட்சொற்கள். பின்னர் நிகழ்வன, இடந்தலைப்பாடு முதலியன. ஐந்துதிணைகளுள், குறிஞ்சிக்குரிய ஒழுக்கம் புணர்ச்சியென்பது அகப்பொருள் நூற்றுணிபு ; இஃது உரிப்பொருளெனப்படும். முதல் - முதற்பொருள் ; அது நிலமும் பொழுதுமென இரண்டுவகையினையுடையது ; பொழுது, சிறுபொழுதும் பெரும்பொழுதுமென இருவகைப்படும். அவற்றுள், குறிஞ்சிக்குரியநிலம், மலையும் மலையைச்சார்ந்த இடமும் ; இதற்குரிய சிறுபொழுது, யாமம் ; பெரும்பொழுது, கூதிர். கரு - கருப்பொருள்கள் ; அவை தெய்வமுதலியன ; அவற்றுள், குறிஞ்சிக்குத்தெய்வம், முருகக்கடவுள், உணவு, ஐவனநெல்லும் தினையும் மூங்கிலரிசியும் ; மிருகம், புலியும் யானையும் கரடியும் பன்றியும் ; மரம், அகிலும் ஆரமும் தேக்கும் திமிசும் வேங்கையும் ; புள், கிளியும் மயிலும் ; பறை, முருகியமும் தொண்டகப்பறையும் ; செய்யுந்தொழில், தேனழித்தலும் கிழங்ககழ்தலும் தினைமுதலியன விளைத்தலும் கிளிகடிதலும் ; யாழ், குறிஞ்சியாழ் ; பூ, காந்தளும் வேங்கையும் சுனைக்குவளையும் ; நீர், அருவியும் சுனையும் ; ஊர், சிறுகுடியும் குறிச்சியும். 'அறத்தொடுநிற்கும்' என்ற சூத்திரத்திற்குப்பொருள் : அறத்தொடுநிற்கும் காலத்து அன்றி - தலைவி இக்களவினைத் தமர்க்கு அறிவுறுத்தல் வேண்டுமென்னும் கருத்தினளாகிய காலத்திலல்லாமல், தோழி அறத்து இயல் மரபு இலள் என்ப - தோழி அறத்தின் இயல்பாகத் தமர்க்குக்கூறு முறைமையில்லாள் என்றுகூறுவர் புலவர் எ - று. அறத்தொடு நிற்றல் - உண்மைகூறுதல். 'எளித்தலேத்தல்' என்னும் சூத்திரத்திற்குப் பொருள் : எளித்தல் - தலைவனை எளியனாகக்கூறுதல், ஏத்தல் - அவனை உயர்த்துக்கூறுதல், வேட்கைஉரைத்தல் - அவனது விருப்பத்தை மிகுத்துரைத்தல், கூறுதலுசாதல் - தலைவியுந்தோழியும் வெறியாட்டிடத்தும் பிரிவிடத்தும் சில கூறுதற்கண்ணே தாமும் பிறருடனேயும் வினவுதல், ஏதீடு - ஒருவன் களிறும் புலியும் நாயும்போல்வனகாத்து எம்மைக்கைக்கொண்டானெனவும் பூத்தந்தான் தழைதந்தானெனவும் இவை முதலிய காரணமிட்டுணர்த்தல், தலைப்பாடு - இருவரும் தாமே எதிர்ப்பட்டார் யான் அறிந்திலேனெனக்கூறுதல், உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ - என்ற அவ்வாறனையும் படைத்துமொழியாது பட்டாங்குகூறுதலென்னும் கிளவியோடேகூட்டி, அ எழுவகைய என்மனார் புலவர் - அத்தன்மையவாகிய எழுகூற்றினையுடைய, அறத்தொடுநிற்றலென்று கூறுவர் புலவர். எளித்தல் முதலியஆறும் இப்பாட்டினுள் பின்னர்க்காணப்படும்.

1. அன்னாய் வாழி - தாயே வாழ்வாயாக ;

(கு - பு.) அன்னாயென்றது செவிலித்தாயை.

* [வேண் டன்னை:] அன்னை வேண்டு - தாயே யான்கூறுகின்றவார்த்தையை விரும்புவாயாக ;

---

* அடியெண்கள் குறிக்கப்படாதவற்றை அவ்வவற்றின் முன்வரிகளின் முதலிலுள்ள எண்களைச்சார்ந்தவையென்று அறிந்துகொள்க.

1 - 12. [ஒண்ணுத, லொலிமென் கூந்தலென் றோழி மேனி, விற லிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ, யகலு ளாங்க ணறியுநர் வினாயும், பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும், வேறுபல் லுருவிற் கடவுட் பேணி, நறையும் விரையு மோச்சியு மலவுற், றெய்யா மையலை நீயும் வருந்துதி, நற்கவின் றொலை யவு நறுந்தோ ணெகிழவும், புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு, முட்கரந் துறையு முய்யா வரும்படர், செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்:]

ஒண் ணுதல் ஒலி மெல் கூந்தல் விறல் மேனி என் தோழி உள் கரந்து உறையும் உய்யா அரு படர் - ஒள்ளிய நுதலினையும் தழைக்கும் மெல் லிய மயிரினையும் பிறர் நிறத்தினைவென்ற வெற்றியினையுடைய நிறத்தினையு முடைய என்னுடையதோழி தன்மனத்துள்ளே மறைத்திருக்கும் தன்னுயி ரைத் தான் தாங்கியிராமைக்குக் காரணமாகிய ஆற்றுதற்கரிய நினைவு,

(கு - பு.) என்னுடையதோழி யென்றது தலைவியை. மனத்துள்ளே மறைத் திருக்கும் நினைவென்க.

இழை நெகிழ்த்த வீவு அரு கடு நோய் செப்பல் வன்மையின் யான் செறித்து - தான் அணிந்தகலங்களை நெகிழப்பண்ணின மருந்துகளாற் கெடுத் தற்கரிய கடிய நோய் நினக்குச்சொல்லுதற்கு எளிதன்றி வலியதன்மையை யுடைமையினாலே யான் அதனை என்னுள்ளேயடக்கி,

நல் கவின் தொலையவும் நறு தோள் நெகிழவும் புள் பிறர் அறியவும் புலம்பு வந்து அலைப்பவும் கடவலின் - அவளுடைய நன்றாகிய அழகுகெட வும் நறியதோள்மெலியவும் வளைகழலுதலைப் பிறரறியவும் தனிமை மேன் மேலேவந்து வருத்தவும் நினக்கு அறிவுறாமற் செலுத்துகையினாலே,

நீயும் அலவுற்று அகலுள் ஆங்கண் அறியுநர் வினாய் - நீயும் அலம்வந்து அகன்றவிடத்தையுடைய ஊரிடத்துக் கட்டினாலும் கழங்கினாலும் எண்ணி யறிவாரைவினாவி (அவர் தெய்வத்தான்வந்த வருத்தமென்றலின்),

(கு - பு.) கட்டு - சிறுமுறத்திற்பரப்பிய நெல்லிற்பார்க்கும் ஒருவகைக் குறி; இங்ஙனம் குறிபார்ப்பவள் கட்டுவிச்சி யென்னப்படுவாள். இதனைத் திருக்கோவையார் உஅ௫-ம் செய்யுளாலும் அதனுரையாலும், "கட்டுவிச்சி கட்டேறிச், சீரார் சுளகிற் சிலநெற் பிடித்தெறியா, வேரா விதிர்வீதிரா மெய் சிலிராக் கைமோவாப், பேரா யிரமுடையா னென்றாள்" (சிறிய திருமடல், ௨0 - ௨௨) என்பதனாலும் உணர்க. கழங்கு - கழற்சிக்காய்; இதனாலும் குறி பார்ப்பது மரபு.

வினாயுமென்றவிடத்தும்மையைப் பேணியென்பதன் பின்னே கூட்டுக.

வேறு உருவின் பல் கடவுள் நறையும் விரையும் ஓச்சியும் பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும் பேணியும் - வேறுபட்ட வடிவினையுடைய பலதெய்வங்களைத் தூபங்களும் சந்தனமுதலியனவுங்கொடுத்தும் பரவியும் வணங்கியும் கலந்தபூக்களைச்சிதறியும் வழிபட்டும் (அதனாற்றீராமையின்),

பேணியுமென்னும்மை சிறப்பு; ஏனைய - எண்ணும்மை.

எய்யா மையலை வருந்துதி - இந்நோயையறியாத மயக்கத்தையுடையை யாய் வருந்தாநின்றாய்;

என் தோழி படர் இழை நெகிழ்த்த நோய் நினக்குச் செப்பல் வன்மை யின் யான் செறித்துத் தொலையவும் நெகிழவும் அறியவும் அலைப்பவும் கடவ லின் நீயும் அலவுற்றுவிஞய்க் கடவுளைப்பேணியும் எய்யாமையலையாய் வருந் துதியெனமுடிக்க.

13 - 4. [முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை, நேர்வருங் குறைய கலங்கெடிற் புணரும்:] அத்துணை முத்தினும் மணியினும் பொன் னினும் நேர் வரும் கலம் கெடின் புணரும்—அவ்வளவாகிய முத்தானும் மாணிக்கத்தானும் பொன்னானும் பொருந்துதல்வரும் பூண் கெட்டதாயிற் பின்னும்வந்துகூடும்; (அதுபோலன்றி,)

முத்துமுதலியவற்றிற்குக்கூறிய இலக்கணங்களை அத்துணையென்றார். குறைய - அசை.

(கு - பு.) அத்துணையென்பது நெஞ்சறிசுட்டு.

15 - 8. [சால்பும் வியப்பு மியல்புங் குன்றின், மாசறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்த, லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை, யெளிய வென்னார் தொன் மருங் கறிஞர்:]

சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின் மாசு அற கழீஇ வயங்கு புகழ் அந்நிலை நிறுத்தல் - தத்தங்குலத்திற்கேற்ற குணங்களினமைதியும் மேம்பா டும் ஒழுக்கமும் பழையதன்மைகெட்டாற் பிறந்த இழுக்கைப் போம்படி கழுவி விளங்கும்புகழை முன்புபோலே நிற்கும்படிநிறுத்தல்,

(கு - பு.) இழுக்கு - தவறுதல்.

தொல் மருங்கு அறிஞர் ஆசு அறு காட்சி ஐயர்க்கும் எளிய என்னார்- பழைதாகிய நூலையறிவார் குற்றமற்ற அறிவினையுடைய தெய்வஇருடிகளுக் கும் எளியகாரியமென்னார்;

* "ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியும்" என்றாராகலின், ஐயர் தேவரா கார்.

19 - 20. [மாதரு மடனு மோராங்குத் தணப்ப, நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி:]

நெடு தேர் எந்தை அரு கடி நீவி - நெடியதேரையுடைய என் தந்தை யது அரிய காவலைக் கடந்து,

மாதரும் மடனும் ஓராங்கு தணப்ப - இருமுதுகுரவரும் தமக்கியைந் தோர்க்குக் கொடுப்போமென்றிருக்கின்றகாதலும் எனதுமடனும் சேரப் போக,

(கு - பு.) இருமுதுகுரவர் - தாய் தந்தையர்.

21. [இருவே மாய்ந்த மன்ற லிதுவென:] இது இருவேம் ஆய்ந்த மன் றல் என - இந்தமணம் தலைவனும் யானும் பெருமையும் உரனும் அச்சமும் நாணும் நுணுகியநிலையாற்பிறந்த கந்தருவமணமென்று,

(கு - பு.) பெருமையும் உரனும் தலைவன்குணங்கள்; அச்சமும் நாணும் தலைவியின் குணங்கள்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௫.

22. நாம் அறிவுறுலின் பழியும் உண்டோ - நாம் யாய்க்கு அறிவுறுத்த லான் நமக்குப் புகழேயன்றி வருவதோர் பழியுமுண்டோ? அஃதில்லை;

உம்மை எச்சவும்மை. ஒகாரம் எதிர்மறை; இது மறைநூல் விதித்த தாகலின்.

(கு - பு.) இது - கந்தருவமணம்; அது மறைநூல்விதி யென்பதை, "மறையோர் தேத்து மன்றலெட்டனுட், டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே" (தொல் - களவியல், க.) என்பதனாலும், "காந்தர்ப்ப மென்பதுண்டாற் காதலிற் கலந்த சிந்தை, மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்டம்" (கம்ப - சூர்ப்பநகை. ருச). என்பதனாலுமுணர்க.

23. ஆற்றின் வாரார் ஆயினும் - இங்ஙனம் அறத்தொடுநின்றபின் தலைவர்க்கே நம்மையடைய நேர்ந்திலாராயினும்,

ஆற்ற - நாம் உயிர்போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருக்க,

24. [ஏனை யுலகத்து மியைவதா னமக்கென:] நமக்கு ஏனை உலகத்தும் இயைவதால் என - நமக்கு மறுபிறப்பினும் இக்கூட்டம் கூடுவதொன்றாயிருந்ததெனக்கூறி,

25 - 6. [மானமர் நோக்கங் கலங்கிக் கையற், றாஅனாச் சிறுமைய ளிவளுந் தேம்பும்:] ஆனா சிறுமையள் மான் அமர் நோக்கம் கலங்கி கையற்று இவளும் தேம்பும் - ஆற்றுந்தன்மைத்தல்லாத நோயினையுடையளாய் மான் நோக்கமமர்ந்த நோக்கமின்றி மையனோக்கங்கொண்டு வினையொழிந்து அயர்ந்து இவளுமெலியும்;

இவளும் (உகூ), கலங்கிக் (உரு) கெடிற் புணரும் (கச); அதுபோலன்றிச் சால்பு முதலியனகுன்றின் (கரு) நிறுத்தல் (ககூ) எளியவென்னார் (கஅ) ஆதலின், இஃது இருவேமாய்ந்தமன்றலென (உக) அறிவுறுலிற் பழியுமில்லை (உஉ); ஆற்றின்வாராராயினும் ஆற்ற (உ௩) ஏனையுலகத்தும் இயைவதாலெனக்கூறி (உச) மெலியு (உகூ) மெனமுடிக்க.

* "வரைவிடை வைத்த காலத்து வருந்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினும், உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணுந், தானே கூறுங் காலமு முளவே." என்பதனுள், 'தானே கூறுங் காலமு முளவே' என்றதனால் உடையளாயெனத் தலைவிகூற்றினைக் கொண்டுகூறினளென்றுணர்க. † "செறிவு நிறையுஞ் செம்மையுஞ் செப்பு, மறிவு மருமையும் பெண்பா லான" என்பதனால், மறை புலப்படுத்தலாகாதென்றாராயினும், ‡ "உற்றுழி யல்லது சொல்ல லின்மையி, னப்பொருள் வேட்கை கிழவியி னுணர்ப." என்பதனான் மறைபுலப்படுத்தலுமாமென வழுவமைத்தலின், இங்ஙனம் தலைவிகூறினள்.

இதனால் தோழி தலைப்பாடுகூறினள்.

(கு - பு.) "வரைவிடைவைத்த" என்னும் சூத்திரத்திற்குப் பொருள்: வரைவு இடைவைத்த காலத்து வருந்தினும் - வரைவுமாட்சிமைப்படா நிற்க

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உக.
† ,, ,, பொருளியல் கரு.
‡ ,, ,, ,, கச.

வும் பொருள்காரணத்தான் அதற்கு இடயீடாகத் தலைவன்நீக்கிவைத்துப் பிரிந்தகாலத்துத் தலைவி வருத்த மெய்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினும் - வரையா தொழுகுந் தலைவன் ஒருஞான்று தோழியையானும் ஆயத்தையானும் செவிலியையானும் கதுமென எதிர்ப்பினும், உரையென தோழிக்கு உரைத்தற்கண்ணும் - அயலார் வரைவிற்கு மணமுரசு இயம்பிய வழியானும் பிறஇடத்தானும் தோழிக்கு இன்னவாறு கூட்டம் நிகழ்ந்ததெனக் கூறி அதனை நமரறியக் கூறல்வேண்டுமென்றும் தலைவற்கு நம்வருத்தமறியக் கூறல்வேண்டுமென்றும் கூறுதற்கண்ணும், தானேகூறும் காலமும் உள - இம்மூன்று பகுதியினும் தோழிவினுவாமல் தலைவிதானே கூறும்காலமுமுள. எ - று "செறிவு" என்னும் சூத்திரத்திற்குப் பொருள் : செறிவும் - அடக்கமும், நிறையும் - மறைபுலப்படாமல் நிறுத்துமுள்ளமும், செம்மையும் - மனக்கோட்டமின்மையும், செப்பும் - களவின்கட் செய்யத் தகுவன கூறலும், அறிவும் - நன்மை பயப்பனவும் தீமைபயப்பனவும் அறிவித்தலும், அருமையும் - உள்ளக்கருத்தறிதலருமையும், பெண்பாலான - இவையெல்லாம் பெண்பாற்குக் காரணங்கள் எ - று. "உற்றுழி" என்னும் சூத்திரத்திற்குப் பொருள் : உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின் - தலைவியர்க்கு ஏதமுற்ற இடத்தன்றித் தோழியர் மறைபுலப் படுத்துக் கூறாதலின், அப்பொருள் வேட்கை கிழவியின் உணர்ப - அம்மறை புலப்படுத்துதல் விருப்பத்தைத் தலைவியர் காரணத்தால் தோழியர் உணர்வர். எ - று. தலைப்பாடு கூறல் - தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டார்; யான் அறிந்திலேனெனத் தோழிகூறல்.

27 - 8. இகல் மீ கடவும் இரு பெரு வேந்தர் வினை இடை நின்ற சான்றோர்போல - மாறுபாட்டின்மிகுதியைச்செலுத்தும் இருவராகிய பெரிய அரசரைச் சந்துசெய்விக்குந் தொழிலிடத்தேநின்ற அறிவுடையோரைப் போல,

(கு - பு.) சந்து செய்வித்தல் - சந்தி செய்வித்தல்.

29. இரு பெரு அச்சமோடு யானும் ஆற்றலேன் - நினக்கும் இவள் வருத்தத்திற்கும் அஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தாலே யானும் வருந்தாநின்றேன்,

(கு - பு.) நினக்கென்றது செவிலியை.

30. கொடுப்பின் நன்கு உடைமையும் - கொடுத்தபின்பு எல்லாவற்றானும் நன்றாகி முடிதலையும்,

குடி நிரல் உடைமையும் - ஒருகுடியாகாமல் இரண்டுகுடியும் ஒத்தலுடைமையையும்,

(கு - பு.) இரண்டுகுடி - தலைவன்குடி தலைவிகுடி.

31. வண்ணமும் - குணத்தையும்,

துணையும் - சுற்றத்து உதவிகளையும்,

பொரீஇ எண்ணாது - ஒப்பித்துப்பார்த்துப் பின்னரும் பலருடன் உசாவாதே,

*"செந்துறை, வண்ணப் பகுதி வரைவின்றாங்கே" என்பதனால் வண்ணம் குணமென்றுணர்க.

32. எமியேம் துணிந்த ஏமம் சால் அருவினை - நும்மையின்றித் தமியேமாய் யாங்களே துணிந்த உயிர்க்குப் பாதுகாவலமைந்த செய்தற்கரிய இக் கந்தருவமணம்,

தானும் புணர்ச்சிக்குப்பின் உடம்படுதலின், எமியேந்துணிந்தவென்றாள்.

33. நிகழ்ந்த வண்ணம் - முன்புநடந்தபடியை,

33 - 4. நீ நனி உணர செப்பல் ஆன்றிசின் - நீமிகவுமறியும்படி சொல்லுதலையமைந்தேன்;

சினவாதீமோ - அதுகேட்டுச் சினவாதிருப்பாயாக;

35. நெல் கொள் நெடு வெதிர்க்கு அணந்த யானை - நெல்லைத் தன்னிடத்தேகொண்ட நெடிய மூங்கிலைத்தின்றற்கு மேனோக்கிநின்றுவருந்தின யானை (அவ்வருத்தந்தீரும்படி),

36. முத்து ஆர் மருப்பின் இறங்கு கை கடுப்ப - முத்துநிறைந்த கொம்பிலே ஏறட்டு நான்ற கையையொப்ப,

37 - 8. துய் தலை வாங்கிய புனிறு தீர் பெரு குரல் நல் கோள் சிறு தினை படு புள் ஓப்பி - துய்யையுடைய தலைவளைந்த ஈன்றணிமைதீர்ந்த பெரியகதிர்களை நன்றாகத் தன்னிடத்தேகொள்ளுதலையுடைய சிறிய தினையிலே வீழ்கின்ற கிளிகளையோட்டி,

துய் - இளைதானபருவத்துப் பஞ்சுநுனைபோன்றிருப்பது. கடுப்ப வளைந்தவென்க.

39. எல் பட வருதியர் என நீ விடுத்தலின் - பகற்பொழுதுகழியாநிற்க நீர்வருவீராகவென்றுகூறி நீ போகவிடுகையினாலே (யாங்களும்போய்),

வருதியர் - வியங்கோண்முற்று.

(கு - பு.) மகளிரைத் தினைப்புனங்காத்தற்கு அனுப்பல் மலைவாணர் வழக்கம்.

40 - 41. கலி கெழு மீமிசை சேணோன் இழைத்த புலி அஞ்சு இதணம் - ஆரவாரம் பொருந்தின மரத்தினுச்சியிலே இராக்காலம் ஆகாயத்திருப்போன்பண்ணின புலி அஞ்சுகைக்குக்காரணமான பரண்,

† "சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி" என்றார் பிறரும்.

41 - 2. [ஏறி யவண, சாரற் சூரற் றகைபெற வலந்த:] அவண சாரல் சூரல் தகை பெற வலந்த இதணம் ஏறி - அவ்விடத்தனவாகிய மலைப்பக்கத்துப்பிரம்பாலே அழகுபெறத் தெற்றின இதணத்தேயேறி,

இனிச் சூரலாலே பிணித்த தழலென்றுமாம். சூரல் - சூரற்கொடியுமாம்.

(கு - பு.) தெற்றின - பின்னின.

43. தழலும் - தழலும்,

தழலாவது கையாற்சுற்றினகாலத்துத் தன்னிடத்துப் பிறக்குமோசையாற் கிளி முதலியவற்றை ஓட்டுங்கருவி; கவணென்பாருமுளர்.

---

* தொல். புறத்திணையியல், உஎ. † குறுந்தொகை, கூ0.

தட்டையும் - தட்டையும்,

தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்கண்ணுள்ளாகநறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி.

குளிரும் - குளிரும்,

குளிராவது இவைபோல்வதோர் கிளிகடிகருவி.

பிறவும் - ஏனையவும்,

பிறவென்றது கவண்முதலியவற்றை.

44. கிளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி - தழலும் தட்டையும் குளிரும் பிறவுமாகிய கிளியோட்டு முறைமையினையுடையவற்றை முறையே முறையே கையிலேவாங்கி ஓட்டி,

45. உரவு கதிர் தெறூஉம் உருப்பு அவிர் அமயத்து - மிகுதலையுடைய ஞாயிற்றின்கிரணங்கள்சுடும் வெம்மைவிளங்குகின்ற பொழுதிலே, ஊழூழ் வாங்கி (சச) யென்க.

46. விசும்பு ஆடு பறவை வீழ் பதி படர - ஆகாயத்தேபறக்கும் பறவைகளெல்லாம் தாம்விரும்புஞ்சேக்கைகளிலே செல்லும்படியாக,

(கு - பு.) சேக்கை - கூடு.

47 - 53. [நிறையிரும் பெளவங் குறைபட முகந்துகொண், டகலிரு வானத்து வீசுவளி கலாவலின், முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு, நிரை செல னிவப்பிற் கொண்மூ மயங்கி, யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ, யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின், மின்மயங்கு கருவிய:]

நிறை இரு பெளவம் குறைபட முகந்துகொண்டு முரசு அதிர்ந்து அன்ன இன்குரல் ஏற்றொடு நிரை செலல் நிவப்பின் கொண்மூ - நிறைந்த கரிய கடலைக் குறையுண்டாம்படி முகந்துகொண்டு முரசு சிறிதுமுழங்கினாற் போன்ற இனியகுரலையுடைய உருமேற்றோடே நிரைத்துச்செல்லுதலையுடைய ஒக்கத்தினையுடையமேகம்,

இன்னிசை முரசின் சுடர் பூண் சேஎய் ஒன்னார்க்கு ஏந்திய இலங்கு இலை எஃகின் மின் மயங்கு கருவிய - இனிய ஓசையையுடைத்தாகிய முரசினையும், ஒளியினையுடைத்தாகிய அணிகலங்களையுமுடையமுருகன் அசுரரைக் கொல்லுமதற்கெடுத்த விளங்குகின்ற இலைத்தொழிலையுடைய வேல்போல மின்னுமயங்குகின்ற தொகுதிகளையுடையவாய்,

அகல் இரு வானத்து வீசு வளி கலாவலின் மயங்கி—ஏனைப்பூதங்கள் விரிதற்குக் காரணமான கரிய ஆகாயத்திடத்தே வீசுகின்ற காற்றுத் தன்னிடத்தே கூடுகையினாலே நிரைத்தநிரைபோய்க் கலங்கி,

கல் மிசை பொழிந்தென - மலைமேலே பெய்தவாக,

கொண்மூக் (ரு0) கருவியவாய் (ருங) மயங்கிப் (ரு0) பறவை பதிப்படரப் (சசு) பொழிந்தென (ருங) என்க.

54 - 6. அண்ணல் நெடு கோட்டு இழிதரு தெண்ணீர் அவிர் துகில் புரையும் அ வெள் அருவி தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி - தலைவனுடைய நெடிய மலைச்சிகரத்தினின்றுங்குதிக்கின்ற தெளிந்த நீரையுடைய

விளங்குகின்ற வெள்ளிய துகிலையொக்கும் அழகிய வெள்ளிதாகிய அருவியிலே நீங்குதலில்லாத விருப்பையுடையேமாய் அமையாமல் விளையாடி,

அண்ணன்மலையில் அருவியெனவே நிலமொன்றென்றாள்.

(கு - பு.) அண்ணலென்றது, தலைவனை.

57 - 8. [பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி, நளிபடு சிலம்பில்:] நளி படு சிலம்பில் பளிங்கு சொரிவு அன்ன பாய் சுனை குடைவுழி - செறிவுண்டான மலையிடத்துப் பளிங்கைக்கரைத்துச் சொரிந்துவைத்தாற்போன்ற பரந்தசுனையைக் குடைந்துவிளையாடுகின்றவிடத்தே,

(கு - பு.) பளிங்கு, நீர்நிலைக்குவமை.

பாயம் பாடி - எங்கள்மனத்துக்கு விருப்பமானவற்றைப் பாடி,

(கு - பு.) பாயம்-மனவிருப்பம்; இஃது இப்பொருளில் வருதலை, "பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது" என்பதனாலுமுணர்க; (பெரும்பாணாற்றுப்படை, ௯௪௮).

59 - 60. பொன் எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்த எம் பின் இரு கூந்தல் பிழிவனம் துவரி - பொன்னிலேயழுத்தின நீலமணிபோலே சிறிய முதுகிடத்தே தாழ்ந்துகிடந்த எம்முடைய பின்னுதலையுடைய கரியகூந்தலை நீரைப் பிழிந்து ஈரத்தைப்புலர்த்தி,

61. உள் அகம் சிவந்த கண்ணேம் - உள்ளாகிய இடமெல்லாம் சிவந்த கண்ணேமாய்,

61 - 2. வள் இதழ் ஒள் செங்காந்தள் - பெரிய இதழையுடைய ஒள்ளிய சிவந்த கோடற்பூ,

ஆம்பல் அனிச்சம் - ஆம்பற்பூ அனிச்சப்பூ,

63. தண் கயம் குவளை - குளிர்ந்த குளத்திற்பூத்த செங்கழுநீர்ப்பூ,

குறிஞ்சி - குறிஞ்சிப்பூ,

வெட்சி - வெட்சிப்பூ,

64. செங்கொடுவேரி - செங்கொடுவேரிப்பூ,

(கு - பு) கொடுவேரி - ஒருசெடி.

* தேமா - தேமாம்பூ,

மணிச்சிகை - செம்மணிப்பூ,

65. உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ் - தனக்கு உரித்தாக நாறும் விரிந்த கொத்தினையுடைய பெருமூங்கிற்பூ,

கூவிளம் - வில்லப்பூ,

(கு - பு:) வில்லம் - வில்வம்.

66. எரி புரை எறுழம் - நெருப்பையொத்த எறுழம்பூ,

சுள்ளி - மராமரப்பூ,

கூவிரம் - கூவிரப்பூ,

---

* 'தேமா' என்பதுமுதல் 'பெருமூங்கிற்பூ' என்பதிறுதியாகவுள்ளவைகள், தருமபுரவாதீனமடத்திலிருந்து கிடைத்த ஒரு பழைய ஏட்டுப்புத்தகத்தில் மட்டும் இருந்தன.

67. வடவனம் - வடவனப்பூ,
வாகை - வாகைப்பூ,
வால் பூ குடசம் - வெள்ளிய பூவினையுடைய வெட்பாலைப்பூ,
68. எருவை - பஞ்சாய்க்கோரை,
கொறுக்கச்சியுமாம்.

(கு - பு.) பஞ்சாய்க்கோரை நாருக்கு முரியது; "பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப், புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி" என்னும் பெரும்பாணாற்றுப்படையாலுணர்க. கொறுக்கச்சி - கொறுக்காந்தட்டை.

செருவிளை - வெண்காக்கணம்பூ,
மணி பூ கருவிளை - நீலமணிபோலும் பூக்களையுடைய கருவிளம்பூ,
69. பயினி - பயினிப்பூ,
வானி - வானிப்பூ,
பல் இணர் குரவம் - பல இதழ்களையுடைய குரவம்பூ,
(கு - பு.) குரவம் - குராமரம்.
70. பசும்பிடி - பச்சிலைப்பூ,
(கு - பு.) பச்சிலையென்று ஒருவகை மரத்திற்கும் ஒருவகைக் கொடிக்கும் பெயருண்டு.

வகுளம் - மகிழம்பூ,
பல் இணர் காயா - பல கொத்துக்களையுடைய காயாம்பூ,
71. விரி மலர் ஆவிரை - விரிந்த பூக்களையுடைய ஆவிரம்பூ,
வேரல் - சிறுமூங்கிற்பூ,
சூரல் - சூரைப்பூ,
72. குரீஇப்பூளை - சிறுபூளை,
குறுநறுங்கண்ணி - குன்றிப்பூ,
(கு - பு.) குன்றியென்று ஒருவகைமரத்திற்கும் ஒருவகைக் கொடிக்கும் பெயர்; குன்றி - குன்றிமணி.
73. குருகிலை - முருக்கிலை,
மருதம் - மருதம்பூ,
விரி பூ கோங்கம் - விரிந்த பூக்களையுடைய கோங்கம்பூ,
74. போங்கம் - மஞ்சாடிப்பூ,
திலகம் - மஞ்சாடிமரத்தின்பூ,
தேன் கமழ் பாதிரி - தேனாறும் பாதிரிப்பூ,
75. செருந்தி - செருந்திப்பூ,
அதிரல் - புனலிப்பூ,
பெரு தண் சண்பகம் - பெரிய குளிர்ந்த சண்பகப்பூ,
76. கரந்தை - நாறுகரந்தை,
குளவி - காட்டுமல்லிகைப்பூ,
கடி கமழ் கலி மா - விரைகமழும் தழைத்த மாம்பூ,

77. தில்லை - தில்லைப்பூ,
பாலை - பாலைப்பூ,
கல் இவர் முல்லை - கல்லிலேபடர்ந்த முல்லைப்பூ,
78. குல்லை - கஞ்சங்குல்லைப்பூ,
(கு - பு.) கஞ்சங்குல்லை - கஞ்சா.
பிடவம் - பிடவம்பூ,
சிறுமாரோடம் - செங்கருங்காலிப்பூ,
79. வாழை - வாழைப்பூ,
வள்ளி - வள்ளிப்பூ,
(கு - பு.) வள்ளி - வள்ளிக்கொடி.
நீள் நறு நெய்தல் - நீண்ட நறிய நெய்தற்பூ,
80- தாழை - தெங்கிற்பாளை,
(கு - பு.) தாழை - தெங்கு.
தளவம் - செம்முல்லைப்பூ,
முள் தாள் தாமரை - முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பூ,
81. ஞாழல் - ஞாழற்பூ,
(கு - பு.) ஞாழல் - புலிநகக்கொன்றை.
மௌவல் - மௌவற்பூ,
(கு - பு.) மௌவல் - ஒருவகைமுல்லை.
நறு தண் கொகுடி - நறிய குளிர்ந்த கொகுடிப்பூ,
(கு - பு) கொகுடி - ஒருவகைமுல்லை.
82. சேடல் - பவழக்கால் மல்லிகைப்பூ,
செம்மல் - சாதிப்பூ,
சிறுசெங்குரலி - கருந்தாமக்கொடிப்பூ,
83. கோடல் - வெண்கோடற்பூ,
கைதை - தாழம்பூ,
கொங்கு முதிர் நறு வழை - தாதுமுதிர்ந்த நறிய சுரபுன்னைப்பூ,
84. காஞ்சி - காஞ்சிப்பூ,
மணி குலை கள் கமழ் நெய்தல் - நீலமணிபோலுங் கொத்துக்களையுடைய தேனாறும் கருங்குவளை,
85. பாங்கர் - ஓமை,
(கு - பு.) ஓமை - ஒருவகைமரம்.
மராஅம் - மரவம்பூ,
(கு - பு.) மராஅம் - கடம்பமரம்.
பல் பூ தணக்கம் - பல பூக்களையுடைய தணக்கம்பூ,
86. ஈங்கை - இண்டம்பூ,
இலவம் - இலவம்பூ,
தூங்கு இணர் கொன்றை - தூங்குகின்ற பூங்கொத்தினை யுடைய கொன்றைப்பூ,

87. அடும்பு - அடும்பம்பூ,

அமர் ஆத்தி - பொருந்தின ஆத்திப்பூ,

நெடு கொடி அவரை - நெடிய கொடியினையுடைய அவரைப்பூ,

88. பகன்றை - பகன்றைப்பூ,

இது சிவதை; *"பகன்றைப்பூ வுறநீண்ட பாசிலைத் தாமரை" என்புழி, வெள்ளிவட்டிலுக் குவமைகோடலின், இது கிலுகிலுப்பையன்று.

பலாசம் - பலாசம்பூ,

(கு - பு.) பலாசம் - புரசு.

பல் பூ பிண்டி - பல பூக்களையுடைய அசோகம்பூ,

89. வஞ்சி - வஞ்சிப்பூ,

பித்திகம் - பிச்சிப்பூ,

சிந்துவாரம் - கருநொச்சிப்பூ,

90. தும்பை - தும்பைப்பூ,

துழாஅய் - திருத்துழாய்ப்பூ,

சுடர் பூ தோன்றி - விளக்குப்போலும் பூவினையுடைய தோன்றிப்பூ,

91. நந்தி - நந்தியாவட்டப்பூ,

நறவம் - நறைக்கொடி,

நறு புன்னாகம் - நறிய புன்னாகப்பூ,

இது புன்னையின் விசேடம்.

92. பாரம் - பருத்திப்பூ,

பீரம் - பீர்க்கம்பூ,

பைங் குருக்கத்தி - பசிய குருக்கத்திப்பூ,

93. ஆரம் - சந்தனப்பூ,

காழ்வை - அகிற்பூ,

கடி இரு புன்னை - மணத்தையுடைய பெரிய புன்னைப்பூ,

94. நரந்தம் - நாரத்தம்பூ,

நாகம் - நாகப்பூ,

(கு - பு.) நாகம் - ஒருவகைமரம்.

நள்ளிருணாறி - இருவாட்சிப்பூ,

(கு - பு.) இருவாட்சியென்பது நள்ளிருணாறியென்பதன் பொருளாக இருத்தலின், இருள்வாசியென்று இருத்தல் கூடுமோவென்று ஊகிக்கப்படுகின்றது.

95. மா இரு குருந்தும் - கரிய பெரிய குருந்தம்பூவும்,

வேங்கையும் - வேங்கைப்பூவும்,

95 - 7. [பிறவு, மரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன், மாலங்குடைய] அங்குமால் உடைய அரக்கு விரித்தன்ன பிறவும் பரேரம்புழகுடன்—அச்சாரவிடத்துத் தம்மில் மயக்கமுடையவாய்ச் சாதிலிங்கத்தைப்பரப்பினாற்போன்ற பிறபூக்களையும் பருத்த அழகினையுடைய † மலையெருக்கம் பூவுடனே,

* கலித்தொகை, மருதம், அ.

† மலைவெருக்கம் பூவெனவும் பிரதிபேதமுண்டு.

பரேரம்புழகு - செம்பூவுமாம்; புனமுருங்கையுமென்பர்.

(கு - பு.) புழகு - மலையெருக்கம் பூவென்பதை, " அழகாவென்றிப் புழகா வன்பர்க் கரியாயன்பர்க் கெளியாய் " என்னும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தாலுணர்க; (நடு - ம் திருவிளையாடல், கஉ). புனமுருங்கை - முள் முருங்கை.

97. மலிவனம் மறுகி - பூக்களிடத்தே மனவேட்கைமிக்குப் பலகாலுந் திரிந்து பறித்து,

98. வான் கண் கழீஇய அகல் அறை குவைஇ - மழை பெய்து தன்னிடத்தைக் கழுவித் தூய்தாக்கின அகன்ற பாறையிலே குவித்து,

கண்ணேமாய் (கூக) மலிவனமறுகிப் (கூஎ) பரேரம்புழகுடனே (கூகூ) ஒண்செங்காந்தள் (சுஉ) முதலியவற்றையும் பிறவற்றையும் (கூரு) பாறையிலேகுவித்து (கூஅ) எனமுடிக்க.

செங்காந்தள் முதலியவற்றிற் கெல்லாம் இரண்டாமுருபும் உம்மையும் விரிக்க. குருந்தும், வேங்கையும், பிறவுமென்ற மூன்றற்கும் உருபுவிரிக்க.

(கு - பு.) உருபு - இரண்டாம்வேற்றுமையுருபு.

99. புள் ஆர் இயத்த - பறவைகளின் ஓசையாகிய நிறைந்த வாச்சியங்களையுடைய வாகிய,

விலங்கு மலை சிலம்பின் - ஒன்றற்கொன்று குறுக்கிட்டுக்கிடக்கின்ற மலைப்பக்கத்திற்புனத்தே,

100 - 101. வள் உயிர் தெள் விளி இடையிடை பயிற்றி கிள்ளை ஓப்பியும் - பெரிய ஓசையினையுடைய தெளிந்தசொற்களை நடுவேநடுவேசொல்லிக் கிளியை ஓட்டுதலைச் செய்தும் தழைதைஇ (க0உ) யென்க.

சொல் — கிளியையோட்டுஞ்சொல். கிளியையுமோப்பியெனச் சிறப்பும்மை.

(கு - பு.) இப்பாட்டில் 62-ம் அடி முதலியவற்றில் குறிஞ்சிக்கும் கூதிர்க்காலத்துக்கும் உரிய பூக்களேயன்றி வேறுநிலத்திற்கும் வேறுகாலத்திற்குமுரியபூக்கள் மயங்கிவந்தமை, "எந்நிலமருங்கிற் பூவும்புள்ளும், மந்நிலம் பொழுதொடு வாராவாயினும், வந்தநிலத்தின் பயத்தவாகும்" என்னும் சூத்திரத்தாலமையும். (தொல். அகத்திணை. கச). இச்சூத்திரத்தின் விசேடவுரையில், 'கபிலர்பாடிய பெருங்குறிஞ்சியில் வரையின்றிப் பூமயங்கியவாறு காண்க' என்று நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலும் இதனை வலியுறுத்துகின்றது.

கிளை இதழ் பறியா - புறவிதழ்களை வாங்கிப்போகட்டு,

(கு - பு.) 'பறியா' என்று பாடங்கொள்ளுதல் நேரென்றுதோற்றுகிறது.

102. கொய் தழை தைஇ - கொய்த தழையைக்கட்டி உடுத்து,

கொய்தழை - மிக்கவிடங்களை நறுக்கினதழை,

(கு - பு.) தொடுத்ததழையை ஆடையாக உடுத்திக்கொள்ளுதல் குறிஞ்சிநிலமகளிர்மரபு; இதனைப் புறநானூறு, ககசு, உசஅ-ம் செய்யுட்களாலுணர்க.

103 - 4. பல் வேறு உருவின் வனப்பு அமை கோதை எம் மெல் இரு

மூச்சி கவின் பெற கட்டி - பலவாய் வேறுபட்ட நிறத்தையுடைய அழக மைந்த மாலைகளை எம்முடைய மெல்லிய கரியமுடியிலே அழகுபெறச்சுற்றி,

(கு - பு.) மாலைவகைபல வென்பதை, "கோக்குங் கோவைகளு, மிண்டைச் சொருக்குந் தாமமுட னிசைக்கும் வாசமாலைகளுந்,தண்டிற்கட்டுங் கண்ணிகளுந் தாளிற்பிணிக்கும் பிணையல்களு, துண்டாநிறைக்குந் தொடையல்களுஞ் சமைத்து" (பெரிய. முருகநாயனர். கூ) என்பதனுலுணர்க. சீவகசிந்தாமணி 2656, 2919 - ம்பாடல் முதலியவற்றையும்பார்க்க.

105 - 6. எரி அவிர் உருவின் அம் குழை செயலை தாது படு தண் நிழல் இருந்தனமாக - நெருப்புப்போல விளங்கும் நிறத்தையுடைய அழகிய தளிரையுடைய அசோகினது தாதுவிழுகின்ற குளிர்ந்த நிழலிலே இருந்த அளவிலே,

(கு - பு.) அசோகந்தளிர் நெருப்புப்போன்ற சிவப்புடையதென்பதை, "செந்தீ, யொண்பூம் பிண்டி" (118 - 9) என்பதனுலுமுணர்க.

107. [எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ் :]

சுரிவளர் நறுங்காழ், பின்னே கூட்டுதும்.

(கு - பு.) 'நறுங்காழ்' என்பது கக0 - ஆம் அடியுரையிலும், 'சுரிவளர்' என்பது ககஉ - ம் அடியுரையிலும் கூட்டப்பட்டிருத்தல் காண்க.

எண்ணெய் நீவிய நலம்பெறு சென்னி (ககசு) - பலகாலும் எண்ணெய் வார்த்த நன்மையைப்பெற்ற தலையிற் குஞ்சி (ககஉ) யென்க.

108. தண் நறு தகரம் கமழ மண்ணி - குளிர்ந்த நறிய மயிர்ச்சந்தனத்தை நாறும்படியாகப்பூசி,

109. ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா - அந்த ஈரம்புலரும்படி விரலாலலைத்துப் புலர்த்துதற்றொழிலாலே பிணிப்பைவிடுத்து,

110. நறு காழ் (க0எ) காழ் அகில் அம் புகை கொளீஇ - அதனை நறிய கரிய வயிரத்தினையுடைய அகிலினது அழகிய புகையூட்டுகையினுலே,

இதில் நறுங்காழ் கூட்டிற்று.

(கு - பு.) காழ் - கருமை, வயிரம், 'நறுங்காழ்' என்பது, 107-ம் அடியிலுள்ளது.

110 - 11. யாழ் இசை அணி மிகு வரி மிஞிறு ஆர்ப்ப தேங்கலந்து - யாழோசையினது அழகுமிகுகின்ற பாட்டினையுடைய மிஞிறுகள் ஆரவாரிக்கும்படி அகிலினது நெய் கலந்து,

(கு - பு.) வண்டிசை யாழொலி போலுமென்பதை. "நரம்பி னிம்மென விமிரு, மாதர் வண்டு" (147-8) என்பதனுலும், "அரவ வண்டொடு தேனினம் யாழ்செயும்", "பாடல்வண் டியாழ்செயும்" (சீவக. 1196, 1207) என்பனவற்றாலுமுணர்க.

112. [மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்:]

மணி நிறம் கொண்ட சுரி வளர் (க0எ) மா இரு குஞ்சியின் - நீலமணியினது நிறத்தைத் தன்னிடத்தேகொண்ட கடைகுழன்றுவளர்ந்தகரியபெரிய மயிரின் கண்ணே,

இதிற் சுரிவளர் கூட்டிற்று.

(கு - பு.) குழன்று - வளைந்து.

மண்ணி (௧0அ) அவிழாப் (௧0௯) புகைகொளுவுகையினாலே (௧௧0) தேங்கலந்து (௧௧௧) ஒருகாழ்வளைஇ (௧௧அ) மணிநிறங்கொண்ட குஞ்சி (௧௧௨) யென்க.

113. மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும் - மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் கொம்புகளிற் பூத்தனவும் சுனைகளிற்பூத்தனவுமாகிய,

114. வண்ண வண்ணத்த மலர்- பலநிறங்களையும் பலசாதிகளையுமுடைய மலர்,

பலநிறங்களையும் பலசாதிகளையுமுடையமலரென ஒன்று நிறமும் ஒன்று சாதிவேறுபாடுங் கூறினார்.

(கு - பு.) ஒன்றென்றது, 'வண்ணம்' என்றசொல்லை.

114 - 5. ஆய்பு விரைஇய தண் நறு தொடையல் வெள் போழ் கண்ணி - அம்மலரை ஆராய்ந்துதொடுத்த தண்ணிய நறிய தொடையலினை யும் வெள்ளிய தாழைமடலையுடைத்தாகிய கண்ணியினையும்,

(கு - பு) கண்ணி - தலைமேல்முடிக்குமாலை.

116. [நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சி:]

நாம் உற மிலைச்சி - முருகனென்று அச்சமுறும்படி சூடி,

குஞ்சியின்கண்ணே (௧௧௨) மிலைச்சியென்க.

நலம்பெறுசென்னி - முன்னேகூட்டிற்று.

(கு - பு.) முருகன் குறிஞ்சிக்குரிய தெய்வம். முன்னேயென்றது, ௧0எ-ஆம் அடியுரையை.

117 - 8. பைங்கால் பித்திகத்து ஆயிதழ் அலரி அம் தொடை ஒருகாழ் வளைஇ - பசிய காம்பினையுடைய பிச்சியினுடைய அழகியஇதழ்களையுடைய பூவைத்தொடுத்த அழகினையுடைய தொடையாகிய ஒருவடத்தைச் சுற்றி,

இஃது அந்திக்காலத்துமலரும் பூவாதலின், அதனைத் தேங்கலந்து (௧௧௧) ஒரு காழ்வளைஇ (௧௧அ) மணிநிறங்கொண்டகுஞ்சி (௧௧௨) யெனக் குஞ்சிக்குஇயல்பாக்கி முன்னேகூட்டுக.

(கு - பு.) தலைவன்வந்தகாலம் பகற்காலமானமையின் இங்ஙனங் கூறினார்.

118 - 120. [செந்தீ, யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ, யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்ப:] குவவு மொய்ம்பு அலைப்ப செந்தீ ஒள் பூ பிண்டி அம் தளிர் ஒருகாது செரீஇ - திரளுதலையுடைய தோளிலேவீழ்ந்து அலைக்கும்படி சிவந்த நெருப்புப்போலும் ஒள்ளிய பூக்களையுடைய அசோகினது அழகிய தளிரை ஒருகாதிலே செருகி,

120 - 122. சாந்து அருந்தி மைந்து இறைகொண்ட மலர்ந்து ஏந்து அகலத்து தொன்று படு பூணொடு நறு தார் பொலிய - சந்தனத்தை யுள்ளடக்கி வலிதங்குதல்கொண்ட அகன்றுயர்ந்த மார்பிடத்தே தொன்றுபட்டுவருகின்ற பேரணிகலங்களோடே நறியமாலை பொலிவுபெற,

123. செம்பொறிக்கு ஏற்ற - மூன்றுவரியாகிய உத்தமவிலக்கணத்திற்குப் பொருந்தின மார்பு (கஉக) என்க.

(கு - பு.) ஆடவர்களுக்கு மார்பில் மூன்றுவரியிருத்தல் உத்தம இலக்கணமென்பதை, "மார்பிற் செம்பொறி வாங்கிய மொய்ம்பு" (திருமு. (௧0௪-௫), "மார்பிடை வரியு மூன்றுள", "பொறிகுலாய்க் கிடந்த மார்பிற் புண்ணியன்" (சீவக. 1462, 1706) என்பவற்றாலுணர்க.

123 - 4. வீங்கு இறை தட கையின் வண்ணம் வரி வில் ஏந்தி அம்பு தெரிந்து - பூணிறுகின முன்கையையுடைய பெரியகையிலே வண்ணத்தையுடைய வரிந்த வில்லையெடுத்து அம்புகளைத்தெரிந்துபிடித்து,

125. நுண் வினை கச்சை தயக்கு அற கட்டி - நுண்ணிய தொழில்களையுடைய கச்சைக் கட்டினசேலை துளக்கமறக்கட்டி,

(கு - பு.) கச்சு - அரைக்கச்சு. துளக்கம் - அசைதல்.

126 - 7. [இயலணிப் பொலிந்த வீகை வான்கழ, றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ :] ஈகை இயல் அணி பொலிந்த வான்கழல் துயல்வரும் தோறும் திருந்து அடி கலாவ - பொன்னாற்செய்யப்பட்ட பூண்களிற்பொலிவுபெற்ற நன்றாகிய வீரக்கழல் பெயரும்பொழுதெல்லாம் பிறக்கிடாத அடியிலே ஏற்றிழிவுசெய்ய,

128 - 9. முனை பாழ் படுக்கும் துன்னரு துப்பின் பகை புறம் கண்ட பல் வேல் இளைஞரின் - பகைப்புலத்தைப் பாழாக்கும் கிட்டுதற்கரிய வலியையுடைய பகைகளை முதுகுகண்ட பலவேலினையுடைய வீரரைப்போலே,

130 - 131. உரவு சினம் செருக்கி துன்னுதொறும் வெகுளும் முளை வாள் எயிற்ற வள் உகிர் ஞமலி - பரக்கின்ற சினத்தாலே செருக்கித் தம்மேலொன்று நெருங்குந்தோறும் கோபிக்கும் மூங்கில்முளைபோலும் ஒளியையுடைத்தாகிய பல்லினையுடையவாகிய பெரிய உகிரையுடைய நாய்,

132. கிளையா கண்ண வளைகுபு நெரிதர - இமையாக்கண்களையுடையவாய் எம்மை வளைத்துக்கொண்டு மேலேமேலேவருகையினாலே,

(கு - பு.) கிளைத்தல் - உறவுகொள்ளுதல்.

133 - 4. [நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா, மிடும்பைகூர் மனத்தே மருண்டு புலம் படர :] யாம் நடுங்குவனம் எழுந்து நல் அடி தளர்ந்து இடும்பை கூர் மனத்தேம் மருண்டு புலம் படர - யாங்கள் அஞ்சி அவ்விருப்பைக்குலைந்து கடிதிற்செல்லுதலாற்றாது வருத்தமிக்க மனத்தையுடையேமாய் மயங்கி வேற்றுப் புலத்தேறச்செல்லாநிற்க,

(கு - பு.) 'அவ்விருப்பு' என்றது, அசோகின் கீழிருந்ததனை.

135 - 6. மாறு பொருது ஓட்டிய புகல்வின் வேறு புலத்து ஆ காண் விடையின் அணிபெற வந்து - தனக்குமாறாகியவிடைகளையெல்லாம் பொருதுகெடுத்த மனச்செருக்கினையுடைய தானறியாதநிலத்திற் புதிய ஆவைக் காணும் ஏறுபோலே அழகுபெற வந்து,

வேட்கைமிகுதிகூறுதற்கு வேறுபுலத்து ஆவென்றார்.

இத்துணையும் ஒக்கக்கூறினார்.

(கு - பு.) இங்கேயுள்ள, 'ஒக்கக்கூறினார்' என்பது, 'ஏத்தல்கூறினார் அல்லது 'ஒக்கங்கூறினார்' என்றிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.

136 - 8. [எம், மலமர லாயிடை வெரூஉத லஞ்சி, மெல்லிய வினிய மேவரக் கிளந்து :] ஆயிடை எம் அலமரல் வெரூஉதல் அஞ்சி மெல்லிய இனிய மேவர கிளந்து - யாங்கள்போகின்றபொழுது எம்மனத்திற் சுழற்சியாலே வெருவுதற்குத் தானஞ்சி மெல்லியவாய் இனியவாயிருக்கின்ற சொற்களை எமக்குப்பொருந்துதல்வரச் சொல்லி,

இதனால் ஏதீடுகூறினாள்.

138 - 9. எம் ஐம்பால் ஆய் கவின் ஏத்தி - எம் ஐவகைப்பட்ட மயிரினையுடைய பலருமாராய்ந்த அழகைப்புகழ்ந்து அசைகின்ற (௧௪0) இளையீ (௧௪௧) ரென்க.

ஒள் தொடி - ஒள்ளிய தொடியினையும்,

140. அசை, வேறுகூறிற்று.

மெல் சாயல் - மெல்லிய மென்மையினையும்,

அ வாங்கு உந்தி - அழகிய வளைந்த கொப்பூழினையும்,

141. மடம் மதர் மழை கண் இளையீர் - மடப்பத்தையுடைய மதர்த்த குளிர்ந்த கண்ணினையுமுடைய இளையீரே,

141 - 2. இறந்த கெடுதியும் உடையேன் என்றனன் - இவ்விடத்தே போந்த கெடுதிகள் பலவுமுடையேனென்றுகூறினான் ;

என்றது - அவை யானை, கலை, பன்றிமுதலியன கெடுத்தனனாக வினாயினான்.

(கு - பு.) யானை முதலியவற்றை வினாவுதல், வேழம்வினாதல், கலைவினாதல், பன்றிவினாதலென வழங்கும்.

குஞ்சியின்கண்ணே (௧௧௨) மிலைச்சிச் (௧௧௩) செரீஇப் (௧௧௧) பொலியக் (௧௨௨) கலாவக் (௧௨௭) கட்டி (௧௨௫) ஏந்தித் தெரிந்து (௧௨௪) விடையின் அணிபெறவந்து (௧௩௩) தான்கொண்டுவந்த ஞமலி (௧௩௧) நெரிதருகையினாலே (௧௩௨) எழுந்து தளர்ந்து (௧௩௫) மருண்டு வேறுபுலம்படராநிற்க (௧௩௪) ஆயிடை (௧௩௭) எம் (௧௩௬) அலமரல் வெரூஉதலஞ்சிக் (௧௩௭) கிளந்து (௧௩௮) ஏத்தி (௧௩௯) இளையீர், இறந்த (௧௪௧) கெடுதியுமுடையே னென்றன (௧௪௨) னெனக் கூட்டுக.

142 - 3. [அதனெதிர், சொல்லேம் மாதலி னல்லாந்து கலங்கி:] அல்லாந்து அதன் எதிர் சொல்லேமாதலின் கலங்கி - அவன்கூற்றிற்கு யாங்கள் மகிழ்ந்து அதற்கு மறுமொழி கொடேமாகையினாலே நெஞ்சழிந்து,

144 - 5. [கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு, சொல்லலும் பழியோ மெல்லிய லீரென:] மெல்லியலீர் கெடுதியும் விடீஇராயின் எம்மொடு சொல்லலும் பழியோ என - மெல்லிய இயல்பினையுடையீர், கெட்டனவும் காட்டித் தாரீராயின் எம்முடன் ஒருவார்த்தை சொல்லுதலும் நமக்குப் பழியாமோவெனச் சொல்லி,

146 - 8. [நைவளம் பழுநிய பாலை வல்லோன், கைகவர் நரம்பி னிம் மென விமிரு, மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த:] நைவளம் பழுநிய பாலை வல்லோன் கைகவர் நரம்பின் இம்மென இமிரும் மாதர் வண்டொடு நயந்து இறுத்த சுரும்பு - நட்டராகம் முற்றுப்பெற்ற பாலையாழை வாசிக்க வல்லவன் தன்கையாலே வாசித்தநரம்புபோலே இம்மென்னும் ஓசைபட வொலிக்கும் காதலையுடைய வண்டினத்தோடே தன்னிடத்து மணத்தை விரும்பித்தங்கின சுரும்பினங்களை,

(கு - பு.) நட்டராகம் - ஒருவகைப் பண்.

149. தாது அவிழ் அலரி தா சினை பிளந்து - தாதுவிரிந்த பூக்களை யுடைய தழைபரந்ததோர்கொம்பை முறித்து,

150. தாறு அடு களிற்றின் வீறு பெற ஓச்சி - தன்னைச் செலுத்து கின்ற பரிக்கோலைக்கைகடந்த மதக்களிறுபோலே வெற்றியுண்டாக ஓட்டி,

தனக்குக்காவலாகிய பெருமையினையும் உரனையும் கைகடந்து வேட்கை மீதூர்ந்து நிற்றலால் தாறடுகளிற்றை உவமங்கூறினார். மதக்களிற்றிற்கு அங்ஙனமோச்சிநிற்றல் இயல்பு.

(கு - பு.) பரிக்கோல் - குத்துக்கோல். தனக்கு - தலைவனுக்கு.

151. கல்லென் சுற்றம் கடு குரல் அவித்து - கல்லென்னும் ஓசைபடக் கத்தும் வேட்டைநாய்களுடைய கடிய குரல்களை அடித்துமாற்றி,

151 - 1. எம் சொல்லல் பாணி நின்றனனாக - யாங்கள் வார்த்தைசொல் லுதலையுடையதோர் காலத்தைப் பார்த்துநின்றானாக,

கெடுதியுமுடையேனென்றனன்; அதனெதிர் (கசஉ) யாங்கள் சொல் லேமாதலிற் கலங்கி (கசரு) மெல்லியலீர், சொல்லலும்பழியோவெனச் சொல்லி (கசரு) ஓச்சி (கருO) அவித்துச் (கருக) சொல்லற்பாணி நின்றன னாக (கருஉ) வெனக் கூட்டுக.

இத்துணையும் வேட்கைகூறினான்.

(கு - பு.) இஃது எளித்தலிலுமடங்கும்.

153 - 4. இருவி வேய்ந்த குறுங்கால் குரம்பை பிணை ஏர் நோக்கின் மனையோள் மடுப்ப - தினையரிந்த தாளாலே வேய்ந்த குறியகால்களையுடைய குடிலிலிருக்கும் மான்பிணையையொத்த பார்வையினையுடைய மனைவி எடுத் துக்கொடுப்ப,

155 - 6. தேம் பிழி தேறல் மாந்தி மகிழ்சிறந்து சேமம் மடிந்த பொழு தின் - தேனாற்சமைத்த கட்டெளிவையுண்டு மகிழ்ச்சிமிக்குக் காவற்றொழிலை மறந்தகாலத்தே,

156 - 8. [வாய்மடுத், திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனாது, அரவுற ழஞ்சிலை கொளீஇ நோய்மிக்கு :]

இரு புனம் வாய்மடுத்து நிழத்தலின் சிறுமை நோனாது நோய் மிக்கு - பெரியபுனத்தை வேழந்தின்று அழித்துவிடுகையினாலே தப்பி நின்றது வினை யும் சிறுமையைப்பொறாதே வருத்தமிக்கு,

159. [உரவுச் சினம்]

உரவு சினம் அரவு உறழ் அம் சிலை கொளீஇ - பரக்கின்றசினத்தை யுடைய பாம்பையொத்த அழகினையுடைய வில்லை நாணேற்றி,

உரவுச்சின அரவுற ழஞ்சிலை கொளீஇ (௧௫௮) எனப் பின்னேகூட்டுக. பாம்பு வடிவிற்கும் கொலைத்தொழிலுக்கு முவமை.

159 - 160. முன்பால் உடல் சினம் செருக்கி கணைவிடுபு - மெய்வலியோடே கோபித்தலாற்பிறந்த சினத்தாலே மயங்கி அம்பையெய்து,

விடுபு, விகாரம்.

புடையூ - தட்டையைப் புடைத்து,

160 - 161. கானம் கல்லென மடி விடு வீளையர் வெடிபடுத்து எதிர - காடெல்லாம் கல்லென்னுமோசை பிறக்கும்படி வாயைமடித்து விடுகின்ற சீழ்க்கையராய் மிக்கவோசையையுண்டாக்கி அக்களிற்றைப் புனத்தினின் றும் ஓட்டுகையினாலே,

ஆர்த்தெனவும் பாடம்.

(கு - பு.) சீழ்க்கை - நாவினது நுனியை மடித்துச்செய்யும் ஒலி; "நாத் தலைமடிவிளி" (சீவக - 120.)

162 - 5. [கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக, விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச், சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு, மையல் வேழ மடங்கலி னெதிர்தர:]

சினம் திகழ் கடாம் செருக்கி மையல் வேழம் - சினம் விளங்குதற்குக் காரணமாகிய மதத்தாலே மனஞ்செருக்கி மயக்கத்தையுடைத்தாகிய யானை,

மரம் கொல்பு - மரங்களை முறித்து,

கார் பெயல் உருமின் பிளிறி - கார்காலத்துமழையின் உருமேறுபோல முழக்கத்தையுண்டாக்கி,

சீர்த்தக இரு பிணர் தட கை இரு நிலம் சேர்த்தி ஒய்யென (௧௬௬) மடங்கலின் எதிர்தர - தன்தலைமைக்குத் தக்கதாகக் கரிய சருச்சரையை யுடைத்தாகிய பெரிய கையைச் சுருட்டி நிலத்தேயெறிந்து கடுகக் கூற்றுவனைப்போலே எங்கள்மேலே வருகையிலே,

166 - 8. [உய்விட மறியே மாகி யொய்யெனத், திருந்துகோலெல் வளை தெழிப்ப நாணுமறந்து, விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்தி:]

ஒய்யென, முன்னேகூட்டிற்று.

உய்விடம் அறியேமாகி விதுப்புறு மனத்தேம் - உயிர்கொண்டு பிழைப்பதோரிடத்தை ஆண்டு வேறுணரேமாகி நடுக்கமுற்ற மனத்தையுடைய யாங்கள்,

நாணு மறந்து திருந்து கோல் எல் வளை தெழிப்ப விரைந்து அவன் பொருந்தி - உயிரினுஞ் சிறந்த நாணைக்காத்தலை மறந்து திருந்திய திரட்சியை யுடைத்தாகிய ஒளியினையுடைய வளையொலிப்ப விரைந்துசென்று அவனைச் சேர்ந்து,

(கு - பு.) "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந்தன்று" (தொல். களவியல், உஉ.)

169. சூர் உறு மஞ்ஞையின் நடுங்க - தெய்வமேறின மயில்போலே நடுங்காநிற்க,

169 - 171. [வார்கோ, லுடுவுறு பகழி வாங்கிக் கடுவிசை, யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலின்:] வார் கோல் உடு உறு கடுவிசை பகழி வாங்கி அண்ணல் யானை அணி முகத்து அழுத்தலின் - நெடிய கோலையுடைய உடு ச்சேர்ந்த கடியவிசையினையுடைய அம்பை நிரம்பவலித்துத் தலைமையினை யுடைய யானையினது அழகியமுகத்தே எய்கையினாலே,

உடு - நாணைக்கொள்ளுமிடம்.

172 - 5. [புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப், புள்ளி வரிநுதல் சிதைய நில்லா, தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவே, ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்ப:]

புள்ளி வரி நுதல் சிதைய புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து நெடு வேள் அணங்கு உறு மகளிர் ஆடுகளம் கடுப்ப இழிதர - புள்ளியினையும் புகரினையுமுடைய மத்தகம் அழகழியும்படி அம்புபட்டு உருவின புண்களால் உமிழப்படுங்குருதி முகத்தேபரந்து முருகனால் வருத்தமுற்ற மகளிர்க்கு மறி யறுத்தாடுங் களத்திற் குருதி குதிக்குமாறுபோலக் குதிக்கையினாலே,

(கு - பு.) மறி - ஆடு

அயர்ந்து நில்லாது புறங்கொடுத்த பின்னர் - தன்னைமறந்து ஆண்டு நிற்றலாற்றாது முதுகிட்டுபோன பின்பு,

இதனாலும் ஏதீடுகூறினாள்.

(கு - பு.) முன்பு 136 - 8 - ம் அடிகளின் உரையின்பின், 'ஏதீடுகூறி னாள்' என்பது எழுதப்பட்டிருத்தல் காண்க.

'மகளிராடுங்களம் கடப்பமாலைவளைத்தாற்போல மிகவும் கடப்பமாலை வளைத்த' என்பாருமுளர்.

(கு - பு.) கடப்பமாலை, பின்னடிகளில் வந்துள்ளது.

176 - 7. திண் நிலை கடம்பின் திரள் அரை வளை இய துணை அறை மாலையின் கை பிணி விடேம் - திண்ணிய நிலையினையுடைய கடம்பினது திரண்டமுதலைநெருங்கச்சூழ்ந்த மகளிரொழுங்கிற்குஒப்புச்சாற்றுதலையுடைய மாலைபோலே கைகோத்தலை விடேமாய்,

(கு - பு.) "கடம்பு சூடிய கன்னி மாலைபோற், றொடர்ந்து கைவிடாத் தோழிமார்" (சீவக - 990.)

178. நுரை உடை கலுழி பாய்தலின் - யாற்றின் நுரையையுடைய பெருக்கிலே குதிக்கையினாலே,

178 - 9. உரவு திரை அரு கரை வாழையின் நடுங்க - அதனிடத்துப் பரக்கின்ற திரைமோதி இடிகரையினின்ற வாழைபோலே கால்தளர்ந்து பின்னர் ஒழுகினேமாக, அதுகண்டு,

179-181. [பெருந்தகை, யஞ்சி லோதி யசையல் யாவது, மஞ்ச லோம்புநி னணிநல னுகர்கெ்ன:] பெருந்தகை அம் சில் ஓதி அசையல் நின் அணி நலன் நுகர்கு யாவதும் அஞ்சல் ஓம்பு என - பெரிய தகுதிப்பாடுடைய

அழகிய சிலவான மயிரினையுடையாய், இங்ஙனம் காறளர்க்கொழுகாதேயென் றெடுத்து யான் நின் அழகியநலத்தை நுகர்வேன்; நின்னைநீங்குவேனென்று சிறிதும் அஞ்சுதலைப்பரிகரியெனச் சொல்லி,

182. மாசு அறு சுடர் நுதல் நீவி - குற்றமற்ற ஒளியினையுடைய நுதலைத்துடைத்து,

182 - 3. நீடு நினைந்து என் முகம் நோக்கி நக்கனன் - நெடுநாள் இக்களவொழுக்கம் நிகழவேண்டுமென்று நினைந்து என் முகத்தைப்பார்த்துச் சிரித்தான்;

(கு - பு.) "உரவுச்சினஞ் செருக்கி.........இறந்த கெடுதியு முடையே னென்றனன்" (130 - 42.) என்பவற்றை நாய்காத்தவாற்றிற்கும், "கணை விடுபுடையு.........என்முகநோக்கிநக்கனன்" (160 - 183) என்பவற்றைக் களிறுகாத்தவாற்றிற்கும் புனலுள் எடுத்தவாற்றிற்கும் மேற்கோள்களாகக் காட்டினர் நச்சினார்க்கினியர்; (தொல் - பொருளியல். கரு - சூ. உரை.)

183 - 5. [அந்நிலை, நாணு முட்கு நண்ணுவழி யடைதர, வொய்யெ னப் பிரியவும் விடாஅன்:]

அந்நிலை, பின்னே கூட்டிற்று.

நண்ணுவழி நாணும் உட்கும் அடைதர ஒய்யென பிரியவும் விடான் - அங்ஙனம் அவன்நணுகாநின்றவிடத்துத் தனக்கு இயல்பாகிய நாணமும் அச்சமும் அவ்விடத்தேவந்து தோன்றுகையினாலே விரையத் தன்னிடத்து நின்றும் இவள் நீங்கவும் விடானாய்,

185 - 6. [கவைஇ, யாக மடைய முயங்கலின்:] அந்நிலை கவைஇ ஆகம் அடைய முயங்கலின் - அங்ஙனம் நின்றநிலையிலே கையாலேயணைத்து இவள் மார்பு தன்மார்பிலே யொடுங்கும்படி தழுவுகையினாலே,

இதனால் எதிரும் வேட்கையுரைத்தலும் கூறினாள்.

186 - 7. [அவ்வழிப், பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை:]

பழு மிளகு உக்க பாறை நெடு சுனை - பழுத்த மிளகுசிந்திக்கிடக்கின்ற கற்பாறையிடத்து நீண்டசுனையிலே,

188. முழு முதல் கொக்கின் தீங்கனி உதிர்ந்தென - பெரிய அடியினையுடைய மாவினுடைய இனியபழங்கள் உதிர்ந்தனவாக, (அப்பழத்தாலும்).

189-190. [புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவின், னெகிழ்ந்துகு நறும்ப ழம் விளைந்ததேறல்:]

பலவின் நெகிழ்ந்து உகு நறு பழம் - பலவினுடைய விரிந்துதேன்பாக் கின்ற நறியபழத்தாலும்,

விளைந்த தேறல் - உண்டான கட்டெளிவு,

புள் எறி பிரசமொடு ஈண்டி - நிரம்புதலால் தன்னை நுகர்கின்ற ஈயினைத் தள்ளியுகுத்த தேனாலே வந்து திரளுகையினாலே,

191. நீர் செத்து அயின்ற தோகை - தனக்கு எளிய நீராகக்கருதி அத் தேறலையுண்ட மயில்,

191-2. [வியலூர்ச், சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி:] சாறு கொள் ஆங்கண் வியல் ஊர் விழவு களம் நந்தி - விழாக்கொள்ளுதற்குரிய அவ்விடங்களையுடைய அகற்சியையுடைய ஊர்களில் விழாக்கொள்ளுதலை யுடைய களத்தே மிக்கு,

ஆங்கணென்றது - கோயில்களை.

193. அரி கூட்டு இன்னியம் கறங்க ஆடும் மகள் - அரித்தெழுகின்ற ஓசையைக் கூட்டுதலையுடைய இனிய வாச்சியங்களொலிப்ப ஆடுகின்றமகள்,

194. கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல் - கழாய்க்கயிற்றிலே ஏறி யாடுகின்ற தாளத்தினால் தான் ஆற்றாது தளருமாறுபோலத் தளருஞ்சாரல்,

(கு - பு.) கழாய் - ஆடுதற்கு நாட்டின மூங்கில்.

தேறலயின்ற தோகை கூத்தாட ஆற்றாது தளருஞ் சாரலையுடைய குன் றென்க.

இதற்கு உள்ளுறையுவமங் கொள்ளுமாறு: - மிளகுக்கபாறை அந்நிலத்து மாக்களுறைகின்ற ஊராகவும், நெடுஞ்சுனை தலைவன் குடியாகவும், மாம்பழத் தாலும் பலாப்பழத்தாலும் விளைந்ததேறல் தந்தையாலும் தாயாலுமுளனாகிய தலைவனாகவும், பிரசம் இவரைக்கூட்டின பால்வரை தெய்வமாகவும், அதனை யுண்டமயில் உயர்ந்த தலைவனைத் தன்குலத்திற்கு ஒத்தானாகக்கருதி நுகர்ந்த தலைவியாகவும், அத்தேறலிற்பிறந்த களிப்புக் களவொழுக்கத்தாற்பிறந்த பேரின்பமாகவும், மயில் ஆடவாற்றாத்தன்மை வருந்திக்குறைந்த தன்மையாக வும் உள்ளுறையுவமங்கொள்க.

(கு - பு.) உள்ளுறையுவமம் - ஒரு பொருளை உள்ளுறுத்து அதனைவெ ளிப்படாமற் கூறுமுவமம்; அது, கருப்பொருள்களுள் தெய்வமொழிந்தவற்றை இடமாகக்கொண்டு புலப்படுமென்பர்; இதனை, தொல்காப்பியம், அகத்தி ணையியல், ௪௬ - ம் சூத்திர முதலியவற்றாலும் அவற்றின் உரையாலும் விள ங்க வுணர்க.

195-7. [வரையர மகளிரிற் சாஅய் விழைதக, விண்பொருஞ் சென் னிக் கிளைஇய காந்தட், டண்கம ழலரி தாஅய்:] விண் பொரு சென்னி கிளைஇய காந்தள் தண் கமழ் அலரி வரை அரமகளிரில் சாஅய் விழைதக தாஅய் - விண்ணைத்தீண்டுகின்ற சிகரங்களிலே கிளைத்த செங்காந்தளினு டைய குளிர்ந்த மணக்கின்ற பூக்கள் கீழே வரையரமகளிர் பரந்து விளையாடு தலின் தங்நலம் சிறிது கெட்டு விரும்புதல்தரும்படி கீழேவந்து பரந்து,

197 - 9. நல் பல வம்பு விரி களத்தில் கவின் பெற பொலிந்த குன்று கெழு நாடன் - நன்றாகிய பலவாகிய கச்சுப்பரந்த களம்போலே அழகுபெறப் பொலிவுபெற்ற மலை பொருந்தின நாடன்,

உயர்ந்தநிலத்தேநின்று மணக்கின்ற காந்தள் வரையரமகளிரால் கீழ்நில த்தே பரந்து அவ்விடத்தைக் கச்சுவிரித்தாற்போல அழகுபெறுத்துமென்ற தனால், நம்மினுயர்ச்சியையுடைய தலைவன் நமது நல்வினையால் தனது பெரு மைகள் தாமுமொழிந்து இவ்விடத்தே வந்துகூடி நமக்கும் உயர்ச்சியுளதாக்கி நம்மை அழகுபெறுத்துகின்றானென்று உள்ளுறையுவமமெய்திற்று.

199. எம் விழை தரு பெருவிறல் - எம்மை எப்பொழுதும் விரும்புதலைத்தருகின்ற பெரியவெற்றியையுடையவன்,

200. அவ்வழி (௧௮௬) உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு - தான் முயங்குகையினாலே அப்பொழுது இவளுள்ளத்து நிகழுந்தன்மை மேல்வரைந்துகொண்டு இல்லறநிகழ்த்துதலாயிருக்குமென்று நினைந்தனனாய் அதனையுட்கொண்டு,

அவ்வழி இங்கே கூட்டிற்று.

(கு - பு.) 'அவ்வழி' 186 - ம் அடியிலுள்ளது.

201 - 3. [சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி, வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப, மலரத் திறந்த வாயில் பலருண :]

பலர் உண மலர திறந்த வாயில் வளநகர் - பலரும்வந்து உண்ணும்படி அகலக் கதவு திறந்துகிடக்கின்ற வாசலையுடைய வளநகர்,

மிடா சொன்றி வருநர்க்கு வரையா சாறு அயர்ந்து அன்ன வளநகர் பொற்ப - மிடாச்சோற்றை வருவார்க்கெல்லாம் வரையாமலிடுகின்ற விழாக் கொண்டாடினாற் போன்ற செல்வத்தையுடைய அகம் பொலிவுபெறும்படி,

முன்புள்ள இயல்புகூறிற்று,

204. பை நிணம் ஒழுகிய நெய் மலி அடிசில் - பசுத்த நிணமொழுகின நெய்மிக்க அடிசிலை நீஇடுகையினாலே,

205 - 6. வசை இல் வான் திணை புரையோர் கடும்பொடு விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் - குற்றமில்லாத உயர்ந்தகுலத்திற்பிறந்த உயர்ந்தோர் தமதுசுற்றத்தோடே விருந்துண்டு மிக்க அடிசிலை,

206. பெருந்தகை - பெரிய தகைமைப்பாடுடையவன்,

207 - 8. நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு அறம் புணையாக தேற்றி - நீயிடுகையினாலே யானுண்டலும் உயர்ந்ததென்றுசொல்லி அப்பொழுது இல்லறம் தங்களைக்கரையேற்றுவதாகத் தெளிவித்து,

ஓடு, ஆலாக்குக.

208 - 210. பிறங்கு மலை மீமிசை கடவுள் வாழ்த்தி கைதொழுது ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி - பெரியமலையில்மிகஉயர்ந்தவிடத்தே யுறைகின்ற முருகனையும் வாழ்த்தி வணங்கி அவன்முன்னே இவள் மயக்கமுறுதற்குக் காரணமான வஞ்சினத்தை உண்மையால்தெளிவித்து,

வஞ்சினம் - பிரியின் அறனல்லதுசெய்தேனாவேனென்னுமொழி. முன் தேற்றுதலின், ஏமுறுவஞ்சினமென்றார்.

(கு - பு.) முன்தேற்று - முதலில் தேற்றுவது.

211. அம் தீம்தெண்ணீர் குடித்தலின் நெஞ்சு அமர்ந்து - அம்மலையில் அழகிய இனிய அருவிநீரை அவன்குடிக்கையினாலே இவள்நெஞ்சு சூளுறவிலே பொருந்தி,

நீர்குடித்தலும் ஒருசூளுறவென்று கொள்க. நெஞ்சமைந்தென்றும்பாடம்

212 - 4. [அருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி, வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும், பூமலி சோலை யப்பகல் கழிப்பி :] வான் உரி உறையுள்

வயங்கியோர் அவாவும் அரு விடர் அமைந்த பூமலி சோலை களிறு தரு புணர்ச்சி அப்பகல் கழிப்பி - ஆகாயத்திடத்தே தமக்குரிய இருப்பினையுடைய விளங்கிய தேவர்விரும்பும்அரிய முழைஞ்சுகளினிடத்தேபொருந்தின பூமிக்க சோலையிலே களிறுகூட்டின கூட்டத்தை அன்றைப்பகற்பொழுதெல்லாம் போக்கி,

உரிய உறையுள், விகாரம்.

உண்மைசெப்புங்கிளவி கூறினள்.

215 - 6. [எல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப், பல்கதிர் மண்டிலங் கல் சேர்பு மறைய :] பல் கதிர் மண்டிலம் ஏழ் ஊர்பு எல்லை செல்ல இறைஞ்சி கல் சேர்பு மறைய - பலகிரணங்களையுடைய ஞாயிறு எழுகுதிரைபூண்ட தேரையேறிப் பகற்பொழுது போம்படி தாழ்ந்து அத்தகிரியைச்சேர்ந்து மறைகையினாலே,

217. மான் கணம் மாமுதல் தெவிட்ட - மான்றிரள் மரத்தடிகளிலே திரள,

அசையிடுதலுமாம்.

217 - 8. ஆன் கணம் கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர - பசுவினுடையதிரள் கன்றுகளையழைக்குங் குரலையுடையவாய் மன்றுகள்நிறையப் புகுதலைச்செய்ய,

219 - 220. ஏங்கு வயிர் இசைய கொடு வாய் அன்றில் ஓங்கு இரு பெண்ணை அகமடல் அகவ - ஊதுகின்ற கொம்புபோன்ற ஓசையையுடைய வளைந்த வாயையுடைய அன்றில் உயரும் பெரியபனையில் உள்மடலிலேயிருந்து பேட்டையழைக்க,

221. பாம்பு மணி உமிழ - பாம்பு தான்மேய்தல் காரணமாகத் தன்னிடத்துமாணிக்கத்தை ஈன,

221 - 2. [பல்வயிற் கோவலர், ஆம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற:] கோவலர் பல்வயின் ஆம்பல் அம் தீங்குழல் தெள் விளி பயிற்ற - இடையர் பலவிடங்களினின்று ஆம்பலென்னும் பண்ணினையுடைய அழகிய இனிய குழலிடத்துத் தெளிந்த ஓசையைப் பலகாலுமெழுப்ப,

223. ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட - ஆம்பலினது அழகியஇதழ்கள் தளையவிழ,

223 - 5. [வளமனைப், பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி, யந்தி யந்தண ரயர :]

அந்தணர் அந்தி அயர - பார்ப்பார் அந்திக்காலத்துச் செய்யுந்தொழில்களை நிகழ்த்த,

வளம் மனை பூந்தொடி மகளிர் சுடர் தலைக்கொளுவி அந்தி அயர - செல்வத்தையுடைய மனைகளிற் பொலிவுபெற்ற தொடியினையுடைய மகளிர் விளக்கை அவ்விடத்தேகொளுத்தி அந்திக்காலத்திற் றொழிலைநிகழ்த்த,

225 - 6. கானவர் விண் தோய் பணவை மிசை ஞெகிழி பொத்த - அக்காட்டில்வாழ்வார் விண்ணைத்தீண்டுகின்ற பரணின்மேலே தீக்கடைகோலாலே நெருப்பைப் பிறப்பித்து எரிப்ப,

227. வானம் மா மலை வாய் சூழ்பு கறுப்ப - மேகம் பெரிய மலையிடத்தைச்சூழ்ந்து கறுப்ப,

227 - 8. கானம் கல்லென்று இரட்ட - காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் கல்லென்னும் ஓசையை யுடையவாய் ஒன்றற்கொன்று மாறிக்கூப்பிட,

கானம் - ஆகுபெயர்.

228. புள்ளினம் ஒலிப்ப - பறவைகள் குடம்பைக்கண்ணேநின்று ஆரவாரிக்கையினாலே,

229 - 230. * [சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத், துனைஇய மாலை துன்னுதல் காணூஉ :]

(கு - பு.) சினைஇய - கோபித்த. சமம் - போர். துணைஇய - விரைந்த.

தெவிட்டப் (௨௧௭) புகுதர (௨௧௮) அகவ (௨௨0) உமிழப் (௨௨௧) பயிற்றக் (௨௨௨) கூம்புவிட (௨௨௩) அயரப் (௨௨௪) பொத்தக் (௨௨௬) கறுப்ப (௨௨௭) இரட்ட ஒலிப்பச் (௨௨௮) செல்சமங்கடுப்ப (௨௨௯) மாலை துன்னுதல்கண்டு (௨௩0) என முடிக்க.

இவ்வெச்சங்கள் எதிர்காலமுணர்த்தின. † "நிலனொருங்கு மயங்குதலின்றென மொழிப." எனவே காலமிரண்டு மயங்குமென்றலின், குறிஞ்சியில் மாலைக்காலங்கூறினார்.

231 - 4. [நேரிறை முன்கை பற்றி நுமர்தர, நாடறி நன்மணம் அயர்கஞ் சின்னாட், கலங்கலோம்புமி னிலங்கிழை யீரென, வீர நன்மொழி தீரக்கூறி:]

இலங்கிழையீர் - விளங்குகின்ற பூணினையுடையீர்,

நுமர் நேர் இறை முன்கை பற்றி தர நாடு அறி நல் மணம் அயர்கம் - நும்முடையசுற்றத்தார் நுமது நேரிய இறையினையுடைய முன்கையைப்பிடித்து எமக்குத்தர நாட்டிலுள்ளாரெல்லாமறியும் நன்றாகிய கலியாணத்தினைப் பின்பு நிகழ்த்துவேம்;

சில் நாள் கலங்கல் ஓம்புமின் என ஈரம் நன்மொழி தீரக் கூறி - யாம் இக்களவொழுக்கத்தாற்பெறும் பேரின்பம்பெறுதற்குச் சிறிதுநாள் இங்ஙனம் ஒழுகாநின்றேமென்று நெஞ்சுகலங்குதலைப் பாதுகாப்பீராகவென்று அருளுடைத்தாகிய நல்லவார்த்தையை இவள்நெஞ்சில் வருத்தந் தீரும்படிசொல்லி,

235. துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து - ஆவைப்புணர்ந்த ஏறுபோலே விடாமல் எம்முடனேகூடவந்து,

236 - 7. துஞ்சா முழவின் மூதூர் வாயில் உண் துறை நிறுத்து பெயர்ந்தனன் - ஓசையை ஒருகாலுமறாத முழவினையுடைய பழைய நம்மூர் வாசலில் பலரும் நீருண்ணுந் துறையிலே எம்மைநிறுத்தி மீண்டுபோனான்;

* இதற்குப் பழையஉரை கிடைத்திலது.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௧௨.

இதனால் வேட்கையுரைத்தல் கூறினாள்.

237-9. அதற்கொண்டு அன்றை அன்ன விருப்போடு என்றும் இரவரல் மாலையனே - அப்புணர்ச்சி தொடங்கி அம்முதனாள் போன்ற விருப்பத்தோடே எந்நாளும் இரவுக்குறியிலே வருதலைத் தனக்கியல்பாகவுடையன்;

ஏகாரம் - ஈற்றசை.

239-241. வருதோறும் காவலர் கடுகினும் கதன் நாய் குரைப்பினும் நீ துயிலெழினும் நிலவு வெளிப்படினும் - அங்ஙனம் வரும்போதெல்லாம் ஊர்காவலர் கடுகிக்காத்தாராயினும் கோபத்தையுடைய நாய் குரைத்ததாயினும் நீ துயிலுணர்ந்தாயாயினும் நிலவு வெளியாக எறித்ததாயினும்,

242-3. வேய் புரை மெல் தோள் இன் துயில் பெறாஅன் - மூங்கிலையொத்த மெல்லிய தோளிற்பெறும் இனிய துயிலைப் பெறாதுபோவன்;

பெயரினும் முனியல் உறாஅன் - யாங்கள் குறியல்லதனைக் குறியாகக் கருதிச் செல்லாநின்று மீண்டு மனையிடத்தே புகுதினும் அதற்கு வெறுத்தலைச்செய்யான்;

244. இளமையின் இகந்தன்றும் இலனே - அவன்றான் இளமைப்பருவத்தைக் கடந்ததுமிலன்;

244 - 5. [வளமையிற், றன்னிலை தீர்ந்தன்று மிலனே:] வளமையில் என்றும் (உ௪உ) தன்நிலை தீர்ந்தன்றும் இலனே - நற்குணங்களைத் திரித்தற்குரிய செல்வச்செருக்கான் எந்நாளும் தன்குலத்திற்குரிய நற்குணங்களின் நீங்கியதுமிலன்;

ஏகாரங்கள் - ஈற்றசை.

"நேரிறை முன்கை ........... தன்னிலை திரிந்தன் றன்லனே" (231 - 44) என்பனவற்றை உண்மைசெப்பலென்னுங்கிளவிக்கு உதாரணமாகக்காட்டினர், நச்சினார்க்கினியர்; (தொல். பொருளியல், 13).

245 - 6. கொன் ஊர் மாய வரவின் இயல்பு நினைஇ தேற்றி - அலர் முதலியவற்றான் அச்சத்தையுடைய இவ்வூரின்கண்ணே தனக்குப் பொய்யாயிருக்கின்ற இரவுக்குறியிலே கூடுதற்கு வருகின்ற வரவினதுதன்மையை இஃதொழுக்கமன்றென்று நினைத்து அவன்வரைந்துகொள்ள இல்லறநிகழ்த்துதலே நல்லொழுக்கமென்று துணிகையினாலே,

(கு - பு.) அலர் - பலரறிந்து கூறும் பழிமொழி.

247 - 8. [நீரெறி மலரிற் சாஅ யிதழ்சோரா, வீரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண் :] இவள் பெரு மதர் மழை கண் நீர் எறி மலரிற் சாஅய் இதழ் சோரா ஈரிய கலுழும - இவளுடைய பெரிய மதர்த்த குளிர்ந்த கண்கள் பெருந்துளியெறிந்துபெய்தமலர்போலே அழகுகெட்டு இமைசோர்ந்து ஈரத்தினையுடையவாய்க் கலங்காநிற்கும்.

249 - 261. [ஆகத் தரிப்பனி யுறைப்ப நாளும், வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய், நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்கு, லளைச்செறி யுழுவையு மாளியு முளியமும், புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும், வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத், துருமுஞ் சூரு மிரைதே ரரவமு, மொ

டுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங், கொடுந்தாண் முதலையு மிடங்கருங் காரமு, நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும், பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும், வழுவின் வழாஅ விழுமமவர்,குழுமலை விடரக முடையவா லெனவே:]

இவள் அவர் குழுமலை விழுமம் உடையவால் என நினைத்தொறும் வலைப் படு மஞ்ஞையின் நலம் செலச் சாஅய் அரிப்பனி நாளும் ஆகத்து உறைப்பக் கலுழும் - இவள் அங்ஙனந்தேற்றிக் கண்ணழுகின்றதற்கு மேலே அவர்வரு கின்ற மலை இடும்பையுடையவாயிருக்குமென்று நினைக்குந்தோறும் வலையி லகப்பட்ட மயில்போலே தன்னலம் போம்படி நுணுகிக் கண்ணில் அரித்து வீழ்கின்ற நீர் நாள்தோறும் மார்பிலே துளிப்பக் கலங்காநிற்கும்;

(கு - பு.) நுணுகி - மெலிந்து.

கங்குல் - இராக்காலத்து,

அளை செறி உழுவையும் - முழைஞ்சிடத்திலே செறியும் புலிகளும்,

(கு - பு.) முழைஞ்சு - குகை.

ஆளியும் - யாளிகளும்,

உளியமும் - கரடியும்,

புழல் கோடு ஆமான் புகல்வியும் - உள்ளுப்பொய்யான கொம்பையு டைய ஆமானிலேறும்,

(கு - பு.) ஆமான் - காட்டுப்பசு.

களிறும் - யானையும்,

வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து உருமும் - வலியினாற்கெடுக்கும் தறுகண்மையை யுடைத்தாகிய வெவ்விய சினத்தையுடைய உருமேறும்,

சூரும் - கொடுந்தெய்வமும்,

இரை தேர் அரவமும் - இரைதேடித்திரியும் பாம்பும்,

ஒடுங்கு இருங்குட்டத்து அரு சுழி வழங்கும் கொடு தாள் முதலையும் இடங்கரும் காரமும் - புடைபட்ட கரிய ஆழத்திடத்துப் போதற்கரிய சுழி யிடத்தேதிரியும் வளைந்ததாளையுடைய முதலையும் இடங்கரும் காரமும்,

இவை மூன்றும் சாதி விசேடம்.

நூழிலும் - வழிபறிப்பார் கொன்றுகுவிக்குமிடங்களும்,

நூழில் - கொடிப்பிணக்கென்பாருமுளர்.

இழுக்கும் - வழுக்குநிலமும்,

ஊழ் அடி முட்டமும் - முறையடிப்பாடாய்ப் பின்பு வழிமுட்டாயிருக் கும் இடங்களும்,

பழுவும் - பிசாசும்,

பாந்தளும் - பெரும்பாம்பும்,

உளப்படப் பிறவும் வழுவின் வழாஅ விழுமம் - உழுவைமுதலாக எண் ணப்பட்ட இவையெல்லாமுட்பட வேறும் தப்புஞ்செயலிற் றப்பாத இடும் பைகளை,

விழுமஞ்செய்வனவற்றை விழுமமென்றார்; இஃது ஆகுபெயர்.

அவர் குழு மலை விடாகம் உடையவால் என - தலைவருடைய கிளைஞ்ய யுடைத்தாகிய மலையின்முழைஞ்சிடம் உடையவாயிருக்குமென்று.

அன்னாய் வாழி ; அன்னாய் , யான் கூறுகின்றதனை விரும்புவாயாக (௧) ; நீயும் எய்யாமையலையாகி வருந்துதி (௮) ; இவளும் (௨௬) ஏனையுலகத்தும் இயைவதாலெனக்கூறி (௨௪) மெலியும் (௨௬) ; யானும் (௨௯) சான்றோர் போல (௨௮) வருந்தாநின்றேன் (௨௯) ; எண்ணாது (௩௧) எமியேந்துணிந்த அருவினை (௩௨) நிகழ்ந்தவண்ணம் நீயுணரச் (௩௩) செப்புதலையமைந்தேன் ; அதுகேட்டுச் சினவாதீமோ (௩௪) ; தினையிற் படுபுள்ளோப்பி (௩௮) வருதியரென நீ போகவிடுகையினாலே (௩௯) யாங்களும்போய் இதணமேறிக் (௪௧) கிளிகடி மரபினவற்றை வாங்கி ஓட்டிக் (௪௪) கொண்மூப் (௫௦) பொழிந்தென (௫௩) நெடுங்கோட்டிழிதரும் தெண்ணீ (௫௪) ரருவி (௫௫) ஆடிப் (௫௬) பாய்சுனைகுடைவுழிப் (௫௭) பாயம்பாடிக் (௫௮) கூந்தலைப் பிழிவனந்துவரிச் (௬௦) சிவந்த கண்ணேமாய் (௬௧) மலிவனமறுகிப் (௯௭) பரோரம் புழகுடனே (௯௬) காந்தள் (௬௨) முதலியவற்றையும் பிறவற்றையும் (௯௫) பாறையிலேகுவித்துத் (௯௮) தெள்விளி பயிற்றி (௧௦௦) ஒப்பியும் (௧௦௧) தழைஅதைஇ உடுத்துக் (௧௦௨) கோதையை (௧௦௩) முச்சியிலேகட்டிச் (௧௦௪) செயலைத் (௧௦௫) தண்ணிழலிலே இருந்தனமாக (௧௦௬), குன்றுகெழு நாடனாகிய எம்பெருவிறல் (௧௧௯) அணிபெறவந்து (௧௩௬) இளையீர், இறந்த (௧௪௧) கெடுதியுமுடையேனென்றனன் ; அதனெதிர் (௧௪௨) சொல்லே மாதலிற் கலங்கி (௧௪௩) மெல்லியலீர், சொல்லலும் பழியோவெனச்சொல்லி (௧௪௫) ஓச்சி (௧௫௦) அவித்துச் (௧௫௧) சொல்லற்பாணிநின்றனனாக (௧௫௨), வேழம் எதிர்தருகையினாலே (௧௬௫) விரைந்தவற்பொருந்தி (௧௬௮) நடுங்கா, நிற்கப் (௧௬௯) பகழியைவாங்கி (௧௭௦) அணிமுகத் தழுத்தலின் (௧௭௧) அதுபுறங்கொடுத்தபின் (௧௭௪) கலுழிபாய்தலின் (௧௭௮) வாழையினடுங்கினமாக, அதுகண்டு பெருந்தகை (௧௭௯) எடுத்து அஞ்சலோம்பெனச்சொல்லி (௧௮௧) நீவி நினைந்து (௧௮௨) என் முகநோக்கி நக்கனன் (௧௮௩) ; அவ்வழி நாணுமுட்கும் அடைதருகையினாலே (௧௮௪) இவள்நீங்கவும் விடானாய் (௧௮௫) அந்நிலை (௧௮௩) முயங்கலின், அவ்வழி (௧௮௬) யிவளுள்ளத்தன்மை யுள்ளினனாய் அதனையுட்கொண்டு (௨௦௦) விருந்துண்டெஞ்சிய மிச்சிலை (௨௦௬) நீயிடுகையினாலே யானுண்டலும் புரைவதென்று சொல்லித் (௨௦௭) தேற்றிப் (௨௦௮) பெருந்தகை (௨௦௬) கடவுளும் வாழ்த்திக் கைதொழுது (௨௦௯) வஞ்சினம்வாய்மையிற் றேற்றித் (௨௧௦) தெண்ணீர்குடித்தலின் நெஞ்சமர்ந்து (௨௧௧) சோலையிலே (௨௧௪) களிறுதருபுணர்ச்சியைக் (௨௧௨) கழிப்பி (௨௧௪) மண்டிலம் மறைகையினாலே (௨௧௬) மாலைதுன்னுதல் கண்டு (௨௩௦) இலங்கிழையீர், கலங்கலோம்புமினென (௨௩௩) ஈரநன்மொழிகூறி (௨௩௪) எம்மோடுவந்து (௨௩௫) உண்துறைநிறுத்துப் பெயர்ந்தனன்; அதற்கொண்டு (௨௩௭) என்றும் (௨௩௮) இரவில்வருமாலையன் ; வருந்தோறும் (௨௩௯) கடுகினும் குரைப்பினும் (௨௪௦) துயிலெழினும் வெளிப்படினும் (௨௪௧) இன்றுயில் (௨௪௨) பெறுமற் போவன்; அதுவேயன்றிப் பெயரினும்

முனியலுறான் (௨௪௩); இகந்தன்றுமிலன் (௨௪௪); என்றும் (௨௪௨) தீர்ந்தன்றுமிலாதவன் (௨௪௫) மாயவரவினியல்புநினைந்து தேற்றுகையினாலே (௨௪௬) இவள்கலுழும் (௨௪௮); அங்ஙனம் அழுகின்றதற்குமேலே அவர் வருகின்ற (௨௬௰) குழுமலைவிடரகம் (௨௬௧) விழுமம் (௨௬௰) உடையவெனா (௨௬௧) நினையுந்தோறும் (௨௫௧) சாஅய் (௨௫௰) உறைப்பக் (௨௪௯) கலங்கா நிற்கும் (௨௫௧); இதுகாண் நல்வினை நிகழ்ந்தவண்ணமென்றாளென வினை முடிக்க.

**ஆரியவரசன்பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர்பாடிய குறிஞ்சிப் பாட்டிற்கு மதுரைஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.**

## வெண்பா.

௧. நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடைய
ளென்குற்றம் யானு முணர்கலேன் - பொன்குற்
றருவி கொழிக்கு மணிமலை நாடன்
றெரியுங்காற் றீய திலன்.

௨. ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே - தேற்ற
மறையோர் மணமெட்டி னைந்தா மணத்திற்
குறையக் குறிஞ்சிக் குணம்.

---